
# சத்தியவசனம்

வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை

ஒக்டோபர் – நவம்பர் 2012



பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். (சங்கீதம் 127:3)

பொருளடக்கம்



நீங்கள் எருசலேமில் தேற்றப்படுவீர்கள்! — பேராசிரியர் எடிசன் — 04


தேவனுடைய கிருபையும் மனதுருக்கமும் — டாக்டர் வுட்ரோ குரோல் — 06


திருமணமும் விவாகரத்தும் ③ — 10


சிதைக்கப்படும் மொட்டுக்கள்! — சாந்தி பொன்னு — 15


இலங்கை திருச்சபைகளின் எதிர்கால நம்பிக்கை, வளரும் சிறார்களே! — வஷ்னீ — 20



சிறுவர் சோலை — 24


ஏதேன்!! — 26


# சத்தியவசனம்


வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை    ஒக்டோபர் - நவம்பர் 2012

வருடம்-40  வெளியீடு-5


குடும்பமே தேவனுடைய அநாதி திட்டம். பெற்றோருக்கு பிள்ளைகளை ஈவாகக் கொடுப்பது தேவனுடைய சித்தம். தேவனுக்கேற்ற வழியில் பெற்றோர் அவர்களை வளர்க்கவேண்டும் என்பது தேவ கட்டளை. பிள்ளைகள் காப்பாற்றப்படுவதும், தேவ பயத்தில் வளர்க்கப்படுவதும், தேவனைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதும், நமது அடுத்த சந்ததிக்கு மாத்திரமல்ல, இன்னும் பிறக்காத சந்ததிகளுக்கும் நாம் செய்யும் பெரிய சேவை.





*நிர்வாக இயக்குனர்:* திரு. மயுக பெரேரா
*முகாமையாளர்:* திரு. ரவிசங்கர்
*சஞ்சிகை ஆசிரியர்:* திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்



120 A, Dharmapala Mawatha,
Colombo 07, Sri Lanka.
**T** 2695441, **F** 2698843,
**E** bttb@sltnet.lk,
www.backtothebible.lk

# EDITORIAL

Mayukha Perera Managing Director Back To The Bible

முதன்மை ஆசிரியரிடமிருந்து...

"நீ ஏன் எதையும் சரிவரச் செய்கிறதில்லை?! இதைச் செய்வதற்கு தவறான வழியொன்று இருக்குமானால் அதைக் கண்டுபிடித்து அதன்படியே செய்கின்றாயே." முன்யோசனையின்றி வேகமாக பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லுகின்ற வார்த்தைகள், பிள்ளைகளின் ஞாபகத்தில் பல வருடங்களாக ஒட்டிக்கொண்டிருக்கும். அந்தப் பிள்ளை தன்னால் எதையும் சரிவர செய்துமுடிக்க முடியாது என்று நம்பிக்கொண்டே வளரும்.

கூடுமானவரை குறிக்கோளுடைய வார்த்தைகளையே பயன்படுத்தும்படி பவுல் எபேசியருக்கு எழுதியபோது அறிவுறுத்தியுள்ளார். "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (எபே 4:29).

இது ஏற்றுக்கொள்வதற்கு இலகுவானது. எனினும், இப்படிப் பேசுவது இலகுவானதா!?

நாம் எப்பொழுதும் நேரிய, பாராட்டுதலுக்குரிய, உறுதுணையளிக்கக்கூடிய சாதகமான வார்த்தைகளையே பாவிக்கவேண்டுமென சிலர் கூறக்கூடும். பவுல் இப்படிக் கூறவில்லை. நாம் பேசும்போது ஊதிப் பெருப்பிக்கும்படி அவர் ஆலோசனை கூறவில்லை. மக்கள், தம்மைக் குறித்து நல்ல தன்மையாக உணரச் செய்யும்படிக்கு நாம் அழைக்கப்படவில்லை. மாறாக, நாம் செய்யவேண்டியதெல்லாம் அவர்கள் சிறப்பானவர்களாக இருப்பதற்கு உதவி செய்வதாகும். வார்த்தைகளினால் அவர்களைக் கட்டியெழுப்ப உதவியாக நாம் அவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கவேண்டும்.

மரியாதைக்குரிய, பாராட்டுதலுக்குரிய விதத்தில், எம்முடைய உரையாடல்களானது, சீர்திருத்தலுக்கும், உபதேசத்திற்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் நீதியைப் படிப்பிப்பதற்கும், மற்றவர்களைக் கட்டியெழுப்புவதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கவேண்டும் (2தீமோத்தேயு 3:16,17).

பழைய ஏற்பாட்டிலிருந்து இந்த உதாரணத்தைக் கருத்திற்கொள்ளுங்கள். எஸ்தர் என்பவளது பெயரில் ஒரு புத்தகம் பெயரிடப்படத்தக்க அளவுக்கு அவள் ஒரு வீராங்கனையாக இருந்தாள். யூத மக்களின் அழிவிலிருந்து அவர்களைக் காப்பாற்றிய ஒரு கருவியாக அவள் கருதப்பட்டாள்.

இவை நடைபெறுவதற்கு, அவள் துணிவுள்ள, சுயநலமற்றவளாக, தரிசனமுள்ள தலைவியாக, நேரகாலங்களைப் புரிந்துகொள்ளக்கூடியவளாக, தனது மக்களுக்காக செயற்படக்கூடியவளாக இருந்தபடியினாலா? நிச்சயமாக இல்லை! எஸ்தர் நான்காம் அதிகாரத்தைப் பார்க்கும்போது, மொர்தெகாய் அவளுக்கு அறிவிக்கும்வரை அவள், மக்கள் முகங்கொடுத்த பிரச்சனையைக் குறித்து எவ்வித கவனமுமில்லாதவளாக, தனது வாழ்வையே கிரயமாகக் கொடுக்கவேண்டுமென்பதினால் செயற்பட விருப்பமற்றவளாகவே இருந்தாள். அவள் பயமுள்ளவளாக, தன்னைப் பாதுகாப்பவளாக, சுயநலமுள்ளவளாகவே இருந்தாள்.

எனினும், அது நீண்டகாலத்திற்கு நீடிக்கவில்லை! அவளது வாழ்வினுள் மொர்தெகாய் பேசினான். அவன் கடினமான சத்தியங்களை அவளுக்குக் கூறினான். யதார்த்தத்திற்குள் அவளைக் கொண்டுவந்தான்.... அவளது வாழ்வினூடாக தேவன் செய்யக்கூடிய தரிசனத்தை அவளிடத்திற்கு அவன் கொண்டுவந்தான். அவளிடம் அவன் கூறியதாவது, "நீ மௌனமாக இராதே. நீ மட்டும் தப்பிவிடலாம் என்று எண்ணாதே. இரட்சிப்பதோ நீ அல்ல. பாதுகாப்பதோ நீ அல்ல. இன்றியமையாதவரோ நீ அல்ல. நீ இல்லாமல் இதனைத் தேவனால் செய்துமுடிக்கமுடியும். எனினும் இப்படிப்பட்ட காலத்திலே, உனக்கூடாகவும் உன்னிலும் தேவன் தாம் விரும்புவதைச் செய்யக்கூடுமே?" தேவன் உன்னைக் குறித்து திட்டமிட்டுள்ள திட்டங்களைத் தவறவிட விரும்புவாயோ?

மொர்தெகாய் எஸ்தரின் தேவையை அறிந்து அதற்கேற்ப அவளைக் கட்டியெழுப்பத்தக்க வார்த்தைகளைப் பேசினான். அவனது வார்த்தைகளைக்கொண்டு, தேவன் எஸ்தரை மாற்றுவதற்காக அதைப் பாவித்து, அவள் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை அறிவித்தான்.

நீங்கள் பேசுகின்ற வார்த்தைகள் எப்படிப்பட்டவைகள்?


நான் மொர்தெகாயைப்போலிருக்க முயற்சிக்கின்றேன். எனினும் சிலநேரங்களில், நான் முன்பு கூறிய பெற்றோரைப்போல பேசி முடிக்கின்றேன்! கட்டியெழுப்புவதைவிட இடித்து வீழ்த்துவது இலகுவானது. எனினும் வாழ்க்கையை மாற்றியமைக்கும் தெய்வீக வார்த்தைகளைப் பேசி வாழ்வை மாற்றுகின்ற கனியைக் காண்பதைப் போன்ற சந்தோஷத்தை வேறு எதனுடனும் ஒப்பிடமுடியாது.

பேசுவதற்காக நீங்கள் எவ்விதமான வார்த்தைகளைத் தெரிந்தெடுப்பீர்கள்? நானோ மொர்தெகாயைப் போலிருக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்குள்,

MPerera

மயூக பெரேரா



# நீங்கள் எருசலேமில் தேற்றப்படுவீர்கள்!

பேராசிரியர் எடிசன்

**"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன். நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்"** (ஏசா. 66:13).

ஒரு குழந்தை என்னதான் அப்பாவின் செல்லப் பிள்ளையாக இருந்தாலும், அப்பாவோடே கூடி விளையாடினாலும் காய்ச்சலோ தலைவலியோ வந்தால் அம்மாவைத்தான் தேடும். அத் தாயின் அன்பும் அரவணைப்பும் தொடுதலும் அத்தனை மென்மையானதும் அமர்த்துகிறதுமாயும் இருக்கும். தாய் பக்கத்தில் இருந்தாலே பிள்ளைக்கு ஆறுதல். அதனால் தான் தேவனும் சொன்னார்: **ஒரு தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்.**

தேவன் பல இடங்களில் தன்னை ஒரு தாயைப்போன்றே அவர் காண்பித்தார். ஒரு தாயும் தகப்பனும் கைவிட்டாலும் நான் உன்னை சேர்த்துக்கொள்வேன் என்றார். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் கனிக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ, அவள் மறந்தாலும் நான் உன்னை மறக்கமாட்டேன் என்றார், அவர் தாயினும் மேலாக என்னிடத்தில் அன்பு வைக்கிறவர். அவர் என்னைத் தேற்றுவேன் என்கிறார். ஆனாலும் எருசலேமிலே தேற்றுவேன் என்று தேவன் அந்தவொரு வார்த்தையை சேர்த்ததின் நோக்கம் என்ன? பாவியாகிய என்னையும் தேவன் ஒரு தாயைப்போல் தேற்றுவேன், சுகமளிப்பேன், இளைப்பாறுதல் தருவேன், துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவேன் என்கிறார். ஆனால் எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள் என்று எருசலேமை விசேஷித்துக் கூறியிருப்பது ஏன்? எருசலேமில் தேவன் என்னைத் தேற்ற என்ன வைத்திருக்கிறார்?

**முதலாவது,** இது நான் தங்கியிருக்கும் இடம் என்று சொன்ன தேவாலயம் எருசலேமில் இருக்கிறது. அது சகல ஜனங்களின் **ஜெப வீடு** என்னப்படும். இங்கு ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்கு தேவனின் செவிகள் திறந்தே இருக்கும். இங்கு அன்னாளின் ஜெபத்தைக் கேட்டு சாமுவேலைக்கொடுத்து அவளை ஆறுதல் படுத்தினார். இங்கு யோசபாத் தேவனை நோக்கி ஜெபித்தபோது, அவன் எதிரிகளை அழித்து அவனுக்கொரு விடுதலையைத் தந்தார். எசேக்கியா ஜெபித்தபோது, அந்த ரப்சாக்கேயை தேவன் துரத்தி இஸ்ரவேலைக் காத்தார். இந்த ஆலயத்தில்தான் சிமியோனும் இயேசுவைக் கைகளில் ஏந்திக்கொண்டு, உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர் என்று தேற்றப்பட்டவனாய் கீதம் பாடினான்.

அருமையானவர்களே, ஆலயம் தேவன் நம்மைத் தேற்றுகிற இடமாயிருக்கிறது. அது அவருடைய வீடு. ஒழுங்காய் ஆலயம் சென்று உண்மையாய் நம்மைத் தாழ்த்தி ஆராதிப்போம் என்றால் நம்மை தேவன் நீதிமானாக்கி நம் இருதயத்தின் விருப்பங்களை நிறைவேற்றி நம்மைத் தேற்றுகிறார், ஆசீர்வதிக்கிறார்.

இரண்டாவதாக, எருசலேமிலேதான் நம் நேசர் நமக்காக பலியான கல்வாரி இருக்கிறது. **"அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்"** (சகரியா

13:1). இவ்வாறு தீர்க்கதரிசனமாக சகரியா இயேசுவின் மரணத்தைக் கூறினார். எருசலேமிலே இயேசு சிலுவையில் ஈட்டியால் பிளக்கப்பட்டு இரத்தம் சிந்தி நமக்கு பாவமன்னிப்பாகிய இரட்சிப்பை சம்பாதித்தார். நமக்குப் பதிலாக அங்கு அவர் மரித்தார், நாம் தண்டனையை அனுபவிக்கிறதற்குப் பதிலாக அன்பினால் அவர் தண்டனையை ஏற்றுக்கொண்டார். அதனால்தான் நாம் குற்றமற்றவர்களாக பாவமே செய்யாதவர் களாக சந்தோஷமாக இருக்கிறோம். அவர் நமது பாவத்தின் பலனை தன்மேல் ஏற்றுக்கொண்டு நம்மை இளைப்பாறப்பண்ணி தேற்றுகிறார். இந்த சிலுவை மரணத்தின் மூலம்தான் நமக்கு மீட்பின் கிரயம் செலுத்தப்பட்டு நாம் விடுதலையானோம். விசுவாசிக்கிற நாம் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாகி பரலோக ராஜ்ஜியத்திற்குப் பங்குள்ளவர்கள் ஆனோம். தேவன் நம்மை இரட்சிப்பினால் தேற்றுகிறார். இரட்சிப்பின் சந்தோஷத்தைத் தந்து தேற்றுகிறார்.

மூன்றாவதாக, எருசலேமில் நம்மை தேற்ற தேவன் ஒரு **மேலறை** ஒன்றை வைத்திருக்கிறார். இங்குதான் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள். இந்த உன்னதத்தின் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்டு உத்தம சாட்சிகளாய் வாழ்ந்து, இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள். இந்த பரிசுத்த ஆவியான வரே நம்முடைய தேற்றரவாளன். "**நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்.**" (யோவான் 14:16-18) என்று சொல்லி தமது ஆவியைத் தந்து நம்மைத் தேற்றுகிறார். பெந்தெகொஸ்தே நாளிலே சீஷர்கள் இந்த பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டபோது அவர்களுடைய கொந்தளிக்கிற மனம் அங்கே அமைதலடைந்து அவர்கள் தேற்றப்பட்டனர். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணி, வழிநடத்தி தேவ ராஜ்ஜியத்தில் சேர்த்து நம்மைத் தேற்றுகிறார். அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமும் நிறைந்த இராஜ்ஜியம். அங்கே மேலறையினால் தேற்றப்படுகிறோம்.

**நான்காவதாக,** நம்மை தேற்றும்படியாக தேவன் **பெதஸ்தா** என்னும் ஒரு குளத்தையும் எருசலேமில் வைத்திருக்கிறார். அதற்கு ஐந்து மண்டபங்கள் உண்டு. இங்கு சுகம் பெறுவதற்காக வியாதியஸ்தர்கள் வந்து தங்கியிருப்பார்கள். அந்த ஐந்து மண்டபங்களும் நேசரின் ஐந்து காயங்களைக் குறிக்கிறது. அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். எனவே எருசலேமிலே ஆலயம், கல்வாரி, மேலறை, பெதஸ்தா ஆகியவை இருக்கிறது. இதன்மூலமாக தேவன் நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை தேற்றுகிறார். இதனால்தான் அவர் சொன்னார்: "**ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன். நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்**" (ஏசாயா 66:13).

சகோதரனே இந்த இரட்சிப்பைப் பெற்றிருக்கின்றீரா? ஒழுங்காய் தேவனுடைய ஆலயத்திற்குச் சென்று ஆராதிக்கின்றீரா? இல்லையென்றால் இன்றைக்கே ஆலயத்திற்குச் செல்ல ஆயத்தமாகுங்கள். ❑


**தேவனுடைய ராஜ்ஜியம்** என்ற தலைப்பில்,

**பேராசிரியர் எடிசன்** அவர்கள்

வானொலியில் வழங்கிய 48 தேவ செய்திகளின் தொகுப்பு

**தேவ ஆசீர்வாதம் பெற**
**இரண்டு எம்.பி.3 ஒலித்தட்டுக்களையும்**
**வாங்கி பயனடையுங்கள்.**




BACK TO THE BIBLE
சத்தியவசனம்

**இலங்கை ரூ. 250/= மட்டுமே!**

*தற்போது விற்பனையில்....*

# தேவனுடைய கிருபையும் மனதுருக்கமும்



டாக்டர் வுட்ரோ குரோல்

இரக்கம், தயவு, பரிவு, மனதுருக்கம், கருணை போன்ற சொற்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை நாம் பொதுவாக கூர்ந்து கவனிப்ப தில்லை. ஒருவரிடம் நீங்கள் இரக்கப்பட்டீர்கள் எனில், அவருடைய சூழ்நிலையை அறிந்து உங்கள் எண்ணங்களிலும் உணர்வுகளிலும் அசைக்கப்படுகிறீர்கள் என்று பொருளாகும். சில வேளைகளில் நீங்கள் அவருக்காக கண்ணீரும் சிந்தலாம். ஆனால், மனதுருக்கம் அல்லது கருணை என்பது உங்களை செயல்பட வைக்கும். இதுவே மாபெரிய வேறுபாடு. கருணை செயலில் இறங்குகிறது. பரிவும் இரக்கமும் எண்ணங்களோடு நின்றுவிடும். கருணைக்கும், தேவனின் மனதுருக்கத்துக்குமுள்ள வேறுபாட்டையும் நாம் மற்றவர்களிடம் எவ்வாறு கருணை காட்டுவது என்பதையும் இக்கட்டுரையில் நாம் ஆராய்வோம்.

103வது சங்கீதத்தில், சங்கீதக்காரனான தாவீது தேவனைப்பற்றிக் கூறுவதை நாம் வாசிக்கலாம். "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது. ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார். அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப் பண்ணினார். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார். என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவரது கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்." (சங்கீதம் 103:1-14)

இறுதியில் காணப்படும் இரு வசனங்களும் தேவனுடைய இரக்கத்தை விளக்குகிறது. நாம் பலவீனர்கள் என்றும், நாம் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவர்கள் என்றும் அவர் அறிவார். பலவேளைகளில் நம் சரீரம் சோர்வும் களைப்புமடைந்து வியாதிக்குள்ளாகிறது. இவை அனைத்துக்கும் அவர் இரங்குகிறார். ஆனால் அவரது மனதுருக்கமோ இந்த இரக்கங்களில் இருந்து மாறுபட்டது.

"அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்" (வசனம் 10). இங்குதான் அவரது மனதுருக்கம் விளங்குகிறது. "கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய

சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்" இங்கு மனதுருக்கம் என்பது தேவனுடைய கிருபையின் ஒரு பகுதியாகும்.

நம்முடைய பாவங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தண்டனையை நமக்குத் தராமல் இருப்பது அவருடைய கிருபையையும், நமக்குக் கிடைக்கத் தகுதியற்ற பல சிறப்பான நன்மைகளைத் தருவது அவரது மனதுருக்கத்தையும் காட்டுகிறது.

தேவனின் மனதுருக்கத்தை விளக்கும் இந்த பழைய ஏற்பாட்டுப் பகுதிக்கு ஒத்த புதிய ஏற்பாட்டுப் பகுதியை நாம் பார்ப்போம். தமது நிருபத்தில் **"இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள். கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே"** (யாக். 5:11) என்று யாக்கோபு எழுதியுள்ளார். கிருபை, பொறுமை, மனதுருக்கம் இம்மூன்றையும் இந்த வசனத்தில் நாம் வாசிக்கிறோம். நீங்களும் நானும் இரக்கமுடையவர்களாயிருக்க வேண்டுமெனில் யோபின் அனுபவத்துக்குள்ளாக நாம் கடந்து செல்லவேண்டும் என்று யாக்கோபு கூறுகின்றார். ஆனால் நம்மில் எத்தனைபேர் யோபின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம்? யோபின் அனுபவம் நமக்கு ஏற்படவேண்டாம் என்றே நான் விரும்புகிறேன். ஏனெனில் அவர் தமக்குப் பிரியமான யாவையுமே இழந்தார். தேவன் நம்மீது சினமடையாமலிருப்பது அவர் நம்மேல் வைத்த மனதுருக்கம், அன்பு மற்றும் கிருபையை வெளிப்படுத்துகிறது.

**"நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்"** என்று 2கொரி. 1:3-4 கூறுகிறது. இதில் ஆறுதல் என்ற சொல் பலமுறை கூறப்பட்டுள்ளது. தேவன் நமக்கு தம் மனதுருக்கத்தை அருளுகிறார் எனில், நாளை நாம் மற்றொருவருக்குக் கருணைகாட்ட அவர் நமக்கு கற்றுத்தருகிறார் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். மனதுருக்கத்தை கற்றுக்கொள்ள எனக்கு யோபுவின் அனுபவங்கள் தேவைப்பட்டாலும், தேவனுடைய மனதுருக்கத்தை என் வாழ்வில் நான் கண்டுகொள்ளவும், மற்றொருவருக்கு அவ்வுருக்கத்தைக் காட்டவும் அவை எனக்கு உதவும்.

தேவனிடம் இரக்கமும் மனதுருக்கமும் உண்டு. அவ்வுருக்கமும் இரக்கமும் நமக்குத் தேவையானால் தேவனுடன் நமது உறவை நாம் வளர்த்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது மட்டுமே நாம் மற்றவர்களிடம் இரக்கம் காட்ட முடியும். மனதுருக்கம் காட்டுவது அவ்வளவு எளிதானதல்ல. பிறரைக் காயப்படுத்தக்கூடிய நிலையில் இருப்பவர்களுடனும், தனிமையிலும், மனவேதனையின் மத்தியில் வருந்துபவர்களுடனும் நாம் இரக்கம் கொள்ளுவது இலகுவல்ல. அதற்கு வலிமையான மனநிலை வேண்டும். நாம் பாடுபடுவதினால் பிறர்பால் மனதுருக்கம் தானாக வந்துவிடாது. 'நமக்கு பாடுகள் வரும்போது அதைவிட்டு விலக எண்ணுவதும், அதற்கு துரிதமான வழிகளைக் காண்பதுமே மனித இயல்பு' என்று வேதவல்லுநர் ஹென்றி நியூமென் கூறுகின்றார்.

நமக்கு "தலைவலி" உள்ளது என்று வைத்துக்கொள்வோம். உடனே அது நீங்குவதற்கான முயற்சிகளை எடுப்போம் அல்லவா? அதுபோலவே மனதுருக்கமடைய வேண்டிய வேளையில் உடனடியாக அங்கிருந்து விலகிச் செல்லவே நாம் முயற்சிப்போம். ஏனெனில் தேவனுடைய மனதுருக்கம் நம்மில் எவருக்கும் கிடையாது. ஆயினும் தேவனுடன் உறவு கொள்வது என்பது அவர் யார் என்பதைக் கண்டறிவதும் அவருக்குப் பிரியமான வாழ்வு



வாழ்வதுமேயாகும். தேவனைப் போலிருப்பது என்பது அவரைப் போன்ற மனதுருக்கம் நம்மில் இருக்கவேண்டும். மனதுருக்கம் நம்மை பலவீன மான இடங்களுக்கும், தாக்குதல் நிறைந்த இடங்களுக்கும், நமக்குப் பிரியமில்லாத இடங்க ளுக்கும் அழைத்து செல்லுகிறது. மனதுருக்கம் காட்டுவது கடினம் எனினும், அது இயலாத காரியமல்ல. தேவன் நம்மீது மனதுருக்கமாய் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பு எனில், நாமும் அவரைப்போல மாறும்போது மற்றவர்களிடம் மனதுருக்கமாய் இருப்போம்.

தேவனுடைய மனதுருக்கம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு வெளிப்பட்டது. அவரது இரக்கங்க ளுக்கு முடிவில்லை. அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் காட்டிய மனதுருக்கத்தை வேதத்தின் பல பகுதிகளில் நாம் காணமுடியும். மத்தேயு 9ஆம் அதிகாரத்தில் அவ்வாறான ஒரு நிகழ்ச்சியை நாம் வாசிக்கிறோம்.

இயேசு கிறிஸ்து கலிலேயாவில் இருந்த போது தமது சீஷர்களைத் தெரிந்தெடுத்து அழைத்தார். தம்மைச் சுற்றிலுமிருந்த மக்க ளுக்கு நன்மைசெய்து தமது மனதுருக்கத்தை வெளிப்படுத்தினார். 27ஆம் வசனத்தில் "இயேசு அவ்விடம் விட்டுப்போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்" என்று வாசிக்கிறோம். இந்த இரு குருடர்களும் நீதியைப் பற்றிக் கேட்கவில்லை; தேவனுடைய இரக்கத்தையே வேண்டினார்கள். கிறிஸ்துவின் மனதுருக்கத்தையே அவர்கள் வாஞ்சித்தார்கள்.

இதற்கு கிறிஸ்துவின் பதில் என்ன? "அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச்செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், விசுவாசிக் கிறோம், ஆண்டவரே! என்றார்கள். அப்பொ ழுது, அவர்களது கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களது கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்" (வச.28-30). ஏன் இவ்வாறு கட்டளையிட்டார்? தாம் இவ்வுலகிற்கு மேசியா வாக வந்த நோக்கத்தை அவ்வளவு விரைவில் மக்களுக்கு வெளிப்படுத்த அவர் விரும்ப வில்லை. எனவேதான் நான் செய்த காரியத்தை நீங்கள் மக்களுக்குத் தெரிவிக்கவேண்டாம் என்றார். ஆனால், "அவர்களோ புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள். அவர்கள் புறப் பட்டுப்போகையில், பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான், ஜனங்கள் ஆச்சரியப் பட்டு: இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை என்றார்கள். பரிசேயரோ: இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசு களை துரத்துகிறான் என்றார்கள்"(மத்தேயு 9: 31-34) பரிசேயர்கள் இயேசுவின் வல்லமையை பிசாசின் வல்லமையாகப் பேசினார்கள். பிசாசின் மீது பிசாசினால் அதிகாரம் செய்வது கடினமான காரியம் என்பதும் அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது.

"பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங் களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத் தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயி ருந்த சகல வியாதிகளையும் சகல நோய்க ளையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கி னார். அவர் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது, (இவர்கள் செவிடர்களோ, ஊமையர் களோ அல்லது குருடர்களோ அல்லர். நம்மைப் போல சாதாரண மக்களே) அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல தொய்ந்துபோன வர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடி யால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலை யாட்களோ கொஞ்சம். ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங் கள் என்றார்" (35-38).

அத்துடன் இயேசு நின்றுவிடவில்லை. அடுத்த அதிகாரத்தில் தம் சீஷர்களைத் தெரிந் தெடுத்து அறுப்புக்கான வேலைக்கு அழைத் தார். இந்த வேத பகுதியில் இரக்கத்துக்கும் மனதுருக்கத்துக்கும், தயவுக்கும் உண்மையான மனதுருக்கத்துக்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிந்துகொள்ளுகிறோம். குருடரான இரண்டு

பேர் தங்களுக்கு இரங்கவேண்டுமென வேண்டிக் கொண்டனர். எனவே அவர்களுக்கு மனதுருக் கத்தை அவர் வெளிப்படுத்தினார். அதுமாத்திர மல்ல, அவர் ஊமையான ஒரு மனிதனையும் குணப்படுத்தினார். இவை யாவையும் அவர் தமது மனதுருக்கத்தினாலே செய்தார். மக்கள் சரீர தேவையுடன் இருந்தபோதெல்லாம் அவரது உண்மையான மனதுருக்கம் வெளிப்பட்டது.

அம்மக்கள் நம்மைப்போல ஆறறிவு கொண்டவர்கள். அவர்களுக்கு ஓர் இரட்சகர் தேவைப்பட்டார். எனவேதான் திரளான ஜனங் களைக் கண்டபொழுது மேய்ப்பனில்லாத ஆடுக ளைப்போல இருந்ததைக் கண்டு மனதுருகினார். மக்கள் மெய்யான தேவனை அறியவில்லையே என்று அவர்களுக்காக நீங்களும் நானும் மனதுருக வேண்டும்.

காது கேளாத சகோதரனிடம் உங்களுக் குப் பரிவு ஏற்படலாம். ஆனால், அவர் தனது இரட்சகரை அறியவில்லையே என்று நாம் கவலைப்படும்போது, மனதுருக்கமடைகிறோம். இரட்சகரை அறியாத மக்களைக் காணும்போது உங்கள் உள்ளம் உடையுமானால், நீங்கள் உண்மையான மனதுருக்கம் அடைகிறீர்கள்.

இரண்டாவதாக, உங்கள் இருதயத்தில் கண்ணீர் வடித்தீர்கள் எனில், அந்த உணர்வு உங்கள் முகத்தில் வெளிப்படும். இதயத்தில் உண்டான மனதுருக்கம் கண்களில் கண்ணீரை வரவழைக்கும். கண்ணீரே மனதுருக்கத்தின் வெளிப்பாடு.

நாம் அடிக்கடி அழுவதில்லை, ஒரு சிலர் ஒருபோதும் அழுவதில்லை. ஆனால் உண்மை யான மனதுருக்கம் உண்டாகும்போது அது அனைத்து தடைகளையும் உடைத்து அனைவ ரையும் கண்ணீரைச் சிந்தவைக்கும். இயேசு கிறிஸ்து அந்த இரண்டுபேர்களுக்கும் பார்வை தேவை என்றும், ஊமையானவனுக்கு பேச்சுத் திறன் தேவை என்றும், அந்த ஜனங்களுக்கும் இரட்சகர் தேவை என்றும் உணர்ந்திருந்தார். அறிந்தது மாத்திரமல்ல, அதனை செயலிலும் வெளிப்படுத்தினார்.

மனதுருக்கம் செயலில் வெளிப்படல் வேண்டும். 'ஐயோ பாவம்', 'அந்தோ பரிதாபம்' போன்ற இரக்க சொற்களைக் கூறிவிடுவதுடன் நின்றுவிடாது அதனை செயல்வடிவத்தில் காட்ட வேண்டும். ஒருவேளை மனதுருக்கத்தை நீங்கள் செயலில் காட்டுவதற்கு தேவையான வாய்ப்பு கிடைக்காமலிருக்கலாம். அதற்குரிய ஆதார வளங்கள் உங்களிடம் இல்லாமலிருக்க லாம். உங்கள் வளங்கள் உங்களது திறமை களைக் கட்டுப்படுத்தலாம்; ஆயினும் உங்க ளுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் உங்கள் செயல் திறமைகளை வளர்க்கும்.

உங்கள் வாழ்வை பாழாக்கி, பிரிந்து சென்ற மகனுக்கோ மகளுக்கோ உங்களுடைய மனதுருக்கம் தேவைப்படலாம். அவர்களுடைய இருப்பிடத்தை நீங்கள் அறியாமலும் இருக்க லாம். உங்களுடைய மனதுருக்கத்தை எப்படி அவர்களுக்கு வெளிப்படுத்துவது? நீங்கள் செய்யக்கூடிய காரியம் ஒன்று உண்டு. அது அவர்களுக்காக ஜெபிப்பதுதான். நாம் ஜெபித்த பின்னர் எவ்வளவோ செயல்களைச் செய்தா லும், ஜெபிக்கும்வரை ஒன்றும்செய்ய இயலாது. நீங்களும் நானும் மக்களுக்கு செய்யக்கூடிய மேலான காரியம் அவர்களுக்காக ஜெபிப்பதே யாகும். நாம் அத்தகைய மக்களை ஜெபத்தில் தாங்கி தேவ கிருபையை மனதுருக்கத்தைக் காட்டி தேவனிடமாக நாம் அவர்களை இழுத்து கொள்ள இடைவிடாது மன்றாட வேண்டும்.

உங்களது மனதுருக்கமே அவர்களை தேவனிடம் வரவழைத்தது என்பதை ஒருநாளில் அவர்கள் அறிந்துகொள்ளுவார்கள். மக்களிடம் நாம் காட்டும் மனதுருக்கத்தை வெளிப்படுத்தும் செயல்களே நாம் தேவனிடம் கொண்டிருக்கும் உறவை வெளிப்படுத்தும். நம் தேசத்து மக்க ளுக்கு இரட்சகர் தேவை என்ற மனதுருக்கம் உங்களிடம் உண்டா? நம் நாட்டு மக்களுக்காக மன்றாடி ஜெபிக்கிறீர்களா? நாட்டுக்காக நாம் ஜெபிக்காவிட்டாலும் இரட்சகரை அறியாத உங்கள் நண்பர்களுக்காக, உறவினர்களுக் காக அயல் வீட்டாருக்காக ஜெபிப்பதுண்டா? சிந்திப்போம்! செயல்படுவோம்!



# ③ திருமணமும்

திருமணத்தைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதை கவனிப்போம். "அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி 2:23,24)

## ஆதியில் விவாகரத்துக்கு இடமில்லை

திருமணத்தைப் பற்றிய தேவனின் ஆதி ஒழுங்கு முன்னர் சொல்லப்பட்ட வசனங்கள் மூலம் நன்கு புலனாகிறது. தேவ திட்டத்தில் விவாகரத்திற்கு இடமேயில்லை. விவாகரத்திற்கான சலுகை கொடுக்கப்படவில்லை. ஆரம்பத்தில் திருமணத்தை தேவன் ஏற்படுத்தி ஸ்திரப்படுத்தினாரே தவிர, திருமணம் சுமுகமாய் இல்லையெனில் அதற்காக திருமண ரத்தை அவர் ஏற்படுத்தவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

தேவன் மாறாதவர். ஓர் ஒழுங்கைச் செய்துவிட்டு அதனை மாற்றுகிறவர் அல்லர்.

தேவனின் திட்டம் - ஒழுங்கு - நியமனம் மாறாதவை என்பதற்கு பின்வரும் வசனங்கள் சான்று பகிர்கின்றன. "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண்.23:19). "நான் கர்த்தர் நான் மாறாதவர்" (மல். 3:6). "அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார் (எபி. 6:17). "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி 13:8). "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக் 1:17). "கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்" (சங் 33:11).

"கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது" (சங்.119:89). இவ்வசனங்கள் தேவ வார்த்தை உறுதியானவை-மாறாதவை என்பதை விளக்குகின்றன. அவர் ஒரு காரியத்தை மாற்றியிருந்தாரானால் அவர் வேறெதையும் மாற்றலாம். மீட்பைப் பற்றிய தமது திட்டத்தையோ அல்லது வருங்காலத்தைப் பற்றிய தமது தீர்மானங்களையோ மாற்றிக்கொள்ளலாம் எனலாம். ஆனால், அவர் எதையும் மாற்றவில்லை. எனவேதான் தேவனின் வார்த்தை மாறாதவையென்று நான் கூறுகிறேன்.

சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்குப் பின் கிறிஸ்து திருமணம் சம்பந்தமாக ஆதியாகமம் 2:23-24ம் வசனங்களில் கூறப்பட்டவற்றையே எடுத்துரைத்தார். "அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்" (மத் 19:4-6).

திருமணம் இருவரும் வாழும் காலம் வரையிலும் சேர்ந்து வாழ்வதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட உறவாகும். சேர்ந்து வாழும் புனித உறவிலிருந்து பிரிந்து வாழ்வதற்கு அவர்கள் முயற்சி செய்யவே கூடாது.

தேவனால் ஆதி திருமணம் நடத்தப்பட்ட பின் 2,500 ஆண்டுகள் வரை திருமணவிலக்குப்

# விவாகரத்தும்

பற்றி உரைக்கப்படவில்லை. தேவன் மோசேக்கு கொடுத்த பத்து கற்பனைகளிலும் விவாகரத்துப் பற்றி கூறப்படவில்லை. உண்மையில் ஏழாவது பத்தாவது கற்பனைகள் மறைமுகமாக விவாக ரத்தை தடைசெய்வதாயுள்ளது.

யாத் 20:14ம் வசனம் “விபசாரம் செய்யா திருப்பாயாக” என்று கூறுகிறது. விவாகரத்தை மறைமுகமாக இவ்வசனம் தடைசெய்கிறது. பத்தாவது கற்பனை (வச 17) “பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்கார னையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதை யையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றை யும் இச்சியாதிருப்பாயாக” எனத் திருமணத்தின் மகத்துவத்தை மறைமுகமாய் விளக்குவதாய் உள்ளது.

பத்து கற்பனையைத் தவிர வேறு எந்தக் கட்டளையையும் தேவன் நேரடியாக மோசே யிடம் கொடுக்கவில்லை. எனினும் விவாகரத்திற் கான அனுமதியை மக்களின் இருதயக் கடினத் தினிமித்தம் வழங்கினார். அது ஒரு கட்டளை அல்ல. அது தேவனுடைய தெளிவான சித்தமும் அல்ல. இதைப் பற்றி இயேசு மத் 19:7,8ம் வசனங்களில் தெளிவுபடுத்துகிறார். தேவன் திருமணத்தை ஏற்படுத்தியபோது விவாகரத் திற்கு அனுமதி கொடுக்கவில்லை. அதற்கு காரணம் எதுவுமில்லை என்பதை நன்கறிந்த பரிசேயர், “தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்?” என இயேசுவிடம் கேட்டனர். ஆதியில் இவ்விதம் இல்லையே? தேவன் இவ்விதமாக கட்டளை கொடுக்கவில்லையே? அப்படியானால், எப்படி தள்ளுதல் சீட்டைக் கொடுக்கலாம்? என்ற அர்த்த புஷ்டியான பதில் கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு இயேசு மிக விளக்கமாக பதில் கூறினார். “உங்கள் மனைவி களைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங் கொடுத்தார். ஆதிமுதலாய் அப்படியிருக்க வில்லை” என்று அவர்கள் மனக் குழப்பத்தைத் தீர்த்தார்.

எனவே இதினின்று விவாகரத்து செய்தல் ஆதி முதலாகவே தேவனின் சித்தமல்ல என்பது தெளிவாகிறது. இஸ்ரவேலரின் மனக்கடினத்தின் நிமித்தம் கொடுக்கப்பட்ட ஒரு அனுமதியே தவிர வேறல்ல. விவாகரத்து சரியான ஒன்று என்றோ அது நியாயமானது தான் என்றோ திருமறை எந்தவொரு இடத்திலும் கூறவில்லை.

## தேவன் விவாகரத்தை இப்போது அனுமதிக்கிறாரா?

நியாயப்பிரமாண காலத்தில் தேவன் விவாகரத்தை அனுமதித்தார். இது இருதயத்தில் விருத்தசேதனம் பெறாத இஸ்ரவேலருக்கான அனுமதி மாத்திரமே. முற்காலத்தில் அவர்கள் சரீரத்தில் விருத்தசேதனம் அடைந்திருந்தனர். ஆனால் இருதயத்தில் விருத்தசேதனமடைய வில்லை. அவர்கள் பின்வாங்கிப் போனார்கள். இருதய விருத்தசேதனமில்லாத இஸ்ரவேலருக் குக் கொடுக்கப்பட்ட அனுமதியே தவிர, பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவ அன்பைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களுக்குரிய விதிமுறையாக பிரமாணமாக ஏற்படுத்தப்படவில்லை.

விசுவாசிகளான எனது நண்பர்களில் சிலர், விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ளதென் றும், எனவே அவ்விதம் செய்வது தவறல்ல என்றும் விவாதிப்பதுண்டு. ஆனால் நான் அவர்களுக்கு ஆணித்தரமாகக் கூறுகிறேன். “விவாகரத்து அனுமதிக்கப்பட்டது பின்வாங்கிப் போன இருதயக் கடின இஸ்ரவேலருக்கே. தேவ அன்பைப் பெற்றுள்ள அவரது பிள்ளைகளாகிய கிறிஸ்தவரான நமக்கு அல்ல.”

வேதாகமத்தை விசுவாசிக்கும் புதிய ஏற்பாட்டின்படி ஆவிக்குரிய கிறிஸ்தவ ஜீவியம் வாழ்வோருக்கு விவாகரத்து அனுமதிக்கப்பட வேயில்லை. இருதயக் கடினமுள்ள இஸ்ரவேல ருக்குக் கொடுக்கப்பட்ட அனுமதியானது, திரு வசனத்தை விசுவாசிக்கும் ஆவிக்குரிய நமக்கு கொடுக்கபட்ட கட்டளை அன்று. எனவே நமது சபைகள் அந்த அனுமதியைச் சட்டமாக்க வேண்டியதில்லை. மோசேயினால் அனுமதிக்கப்

பட்ட கட்டளையின்படியல்லாமல் நமது சபை கிறிஸ்து அருளிய ஒழுங்கு முறைமையின்படியே தான் ஆளப்படவேண்டும். இருதயக் கடினமுள்ள இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட "விவாகரத்து அனுமதி" என்பதைக் கட்டளையாக்கி நாம் பின்பற்ற முற்படக்கூடாது.

தேவன் ஏற்படுத்திய திருமண நியதி யுடன் கிறிஸ்து எதையாவது கூட்டினதுண்டா? மோசே வழங்கிய அனுமதியை, இயேசுகிறிஸ்து அங்கீகரித்தாரா? பரிசேயர்கள் இயேசுவிடம் புருஷனானவன் தன் மனைவி எந்த முகாந்திரத் தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டபோது அவர் கூறிய பதில் யாது? இதோ அவரது பதில் "ஆதியிலே மனுஷரை உண்டாக் கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்க வில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக் கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்பதாகும்" (மத் 19:4-6).

தேவன் ஏற்படுத்தியதையும், தேவனின் திட்டத்தையுமே கிறிஸ்து மீண்டும் எடுத்துக்கூறி பரிசேயர்களுக்குப் பதில் கொடுத்தார். எனவே, "புருஷனானவன் தன் மனைவி எந்த முகாந்திரத் தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா?" என சிந்தியுங்கள். இரண்டாவது கேள்வி, "அப்படி யானால் மோசே தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று ஏன் கட்டளை யிட்டார்?" என யூதர்கள் சிந்தித்தனர். அதற்கு இயேசு கூறிய பதில் "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தி னிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத் தான்" என்பதாகும். மோசே இருதய விருத்த சேதனம் இல்லாதவர்களுக்கு கொடுத்த ஓர் அனுமதியே இது. அவன் அனுமதி கொடுத்தாரே யன்றி இதனைக் கட்டளையாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறவில்லை. தேவனும் இதை அங்கீகரித்துச் சட்டமாக்கவில்லை. தேவன் தாம் நியமித்த ஒன்றை மாற்றவும், தமது சட்டங்களை யும் தீர்மானங்களையும் மாற்றவும் எண்ணினால் அவர் தேவன் அல்லவே.

## வானொலி நிகழ்ச்சிகள்

FEBA 1125 KHz **'சத்தியவசனம்'**
**காலை 6.00 மணிக்கு**
**(திங்கள், செவ்வாய்)**

**கந்துரட FM வசந்த மலர்கள்**
**மாலை 6.30 மணிக்கு.**
**(சனி தவிர்ந்த ஏனைய நாட்களில்)**

SLBC **வர்த்தகசேவை - 'தீபம்'**
**மாலை 5.30 மணிக்கு. (ஞாயிறு தோறும்)**


**வெற்றி FM - 'தெய்வீக நற்சிந்தனைகள்'**
**காலை 5.45 மணிக்கு. (தினமும்)**

பலாலி FM - **'திருமறைக்குத் திரும்புவோம்'**
**மாலை 7.15 மணிக்கு.**
**(திங்கள் முதல் வெள்ளிவரை)**



தேவன், விவாகரத்திற்கு மோசேயின் மூலம் ஏன் அனுமதி கொடுத்தார் என்பதை உபா 24:1-4ம் வசனம்வரையிலும் காணலாம். "ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின இரண்டாம் புருஷன் இறந்துபோனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாக சேர்த்துக்கொள்ளக்கூடாது; அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம்வரப் பண்ணாயாக". இதினின்று இருதயக் கடினத்தின் நிமித்தம் செய்யப்படும் விபசாரமாகிய பாவத்தின் காரணத்தினால் விவாகரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது என்பதை நன்கு அறிகிறோம். வேறெந்தவிதக் காரணமும் கூறப்படவில்லை.

விவாகத்திற்கு முன்னர் வழிதப்பி நடந்த பெண் என்பதை விவாகத்திற்கு பின் புருஷன் கண்டுபிடித்தால் இவ்வாறு விவாகரத்து செய்ய வேண்டும். இது உண்மையென்று கண்டுபிடிக்கப்பட்டால் கொடுக்கப்படும் தண்டனை மரண தீர்ப்பே. "ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணின ஒருவன் அவளிடத்தில் பிரவேசித்த பின்பு அவளை வெறுத்து: நான் இந்த ஸ்திரீயை விவாகம்பண்ணி, அவளிடத்தில் சேர்ந்தபோதுஉ கன்னிமையைக் காணவில்லை என்று அவள் மேல் ஆவலாதியான விசேஷங்களைச் சாற்றி, அது மெய்பிக்கப்பட்டால் அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்" என்று உபாகமம் 22: 13,14ம் வசனங்கள் கூறுகின்றன. அது உண்மையல்ல, பொய்குற்றச்சாட்டு என்று கண்டுபிடிக்கப்பட்டால், புருஷன் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி 15-19ம் வசனங்கள் கூறுகின்றன. ஆனால் குற்றம் சுமத்தப்படுத்தப்பட்டால் என்ன செய்யவேண்டும்? "அந்தப் பெண்ணிடத்தில் கன்னிமை காணப்படவில்லையென்னும் சங்கதி மெய்ப்பட்டதேயானால்,



அந்தப் பெண்ணை அவள் தகப்பனுடைய வீட்டு வாசலுக்கு முன்பாகக் கொண்டுவந்து, அவள் இஸ்ரவேலில் மதிகெட்ட காரியத்தைச் செய்து, தன் தகப்பன் வீட்டிலே வேசித்தனம்பண்ணின படியினாலே, அவளுடைய பட்டணத்து மனிதர் அவளைக் கல்லெறிந்து கொல்லக்கடவர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்" (வச 20,21).

இதுதான் பழைய ஏற்பாட்டுக் காலத்தின் விவாகரத்துக்கான கட்டளை. சிலர் இதன் ஒரு பகுதியை விரும்பி செயல்படுத்த முனைகின்றனர். மற்றைய பகுதியையோ விரும்பாமல் ஒதுங்கி விடுகின்றனர். விபசாரமும் வேசித்தனமும் பெருகியுள்ள இக்காலத்தில் உபாகமம் 22ம் அதிகாரத்தை கட்டாயமாக வாசிக்க வேண்டும். அப்போது தேவன் எவ்வாறு மிகக் கொடிய பாவமான விபசாரத்தையும், வேசித்தனத்தையும் வெறுக்கிறார் என்பதைக் கண்டு கொள்ளலாம்.

"புருஷனுக்கு விவாகம்பண்ணப்பட்ட ஸ்திரீயோடே ஒருவன் சயனிக்க கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஸ்திரீயோடே சயனித்த மனிதனும் அந்த ஸ்திரீயும் இருவரும் சாகவேண்டும்" (உபா 22:22). இங்கும் விவாகரத்துப் பற்றி குறிப்பிடப்படவில்லை. விபசாரம் செய்வோர் கொல்லப்பட வேண்டும் என்ற தண்டனையே கொடுக்கப்படுகிறது.

## விபசாரமும் வேசித்தனமும்

மத்தேயு 19:9ல் இயேசு முன் கூறப்பட்ட சட்டத்தை எடுத்துக் கூறுகிறாரேயன்றி, அதை ஆமோதிக்கவில்லை. "எவனாகிலும் தன் மனைவியை வேசித்தனம் செய்ததின் நிமித்தமேயன்றி அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால் அவன் விபசாரம் செய்கிறவனாயிருப்பார்" விபசாரம், வேசித்தனம் என்பன

ஒரே கருத்துடையனவை அல்ல. வேதத்தில் இரண்டிற்கும் வெவ்வேறுவிதமான விளக்கத்தை காணலாம். விபசாரம் என்பது திருமணத்திற்கு பின்னர் நடைபெறும் ஒழுக்கக்கேடு, வேசித்தன நடக்கை என்பது திருமணத்திற்கு முன்னர் நடைபெறும் ஒழுக்கக்கேடு. சில வசனங்கள் மூலம் தேவன் பழைய, புதிய ஏற்பாடுகளில் இவ் வார்த்தைகளை எவ்வாறு உபயோகித்துள்ளார் என்பதை ஆராய்வோம்.

ஓசியா 4:14ல் இவ்விரு வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. "உங்கள் குமாரத்திகள் (திருமணமாகாதவர்கள்) வேசித்தனம் செய்கிறதினிமித்தமும், உங்கள் மருமக்கள்மார் விபசாரம் செய்கிறதினிமித்தமும், நான் அவர்களைத் தண்டியாமலிருப்பேனோ?" 1கொரிந்தியர் 7ம் அதிகாரத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் திருமணமாகாதவர்களுக்கு உரைத்ததாவது "வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்" (1கொரி 7:2) என்பதாகும். பரிசேயர் இயேசுவிடம் "நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்கள் அல்ல" (யோவா 8:41) என்றனர். அங்கு அவர்கள் இயேசுவின் கன்னிப் பிறப்பை கேலிசெய்தனர். வேசித்தனத்தினால் விவாகத்திற்கு முன்பே மரியாள் இயேசுவை பெற்றதாக பரிகாசம் செய்தனர். வேசித்தனம் திருமணம் செய்வதற்கு முன்னர் நடைபெறும் ஒழுக்கக்கேடு என்ற கருத்தை இங்கு காண்கிறோம்.


இவ்விரு வார்த்தைகளும் கலா 5:19ல் அடுத்தடுத்து உபயோகிக்கப்பட்டுள்ளன. "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன: விபசாரம் வேசித்தனம்..." அப்போஸ்தலனாகிய பவுல் ஒரே பாவத்தின் இரு நிலைமைகளை இங்கு தெளிவுபடுத்துகிறதை நாம் காண முடிகிறது.

பொதுவாக வேசித்தனம் என விபசாரத்தைக் குறிப்பிட்டாலும் இரு வார்த்தைகளும் இவ்விதப் பொருளுடன் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு அர்த்தத்தையும் இயேசு தன் உரைகளில் கையாண்டார். எனவே யாரும் இதைக்குறித்து தர்க்கிக்க இடமில்லை. இருதய கடினத்தின் நிமித்தம், திருமணத்திற்கு முன்னர் வேசித்தனம் நடைப்பெற்றால் விவாகரத்து செய்ய இஸ்ரவேலர் அனுமதிக்கப்பட்டனர். எனினும், குற்றவாளி கொல்லப்பட வேண்டும். திருமணத்திற்கு பின்னர், இப்பாவம் காணப்பட்டால், செய்தால் அது விபசாரம் என்று அழைக்கப்பட்டு, இருவருக்குமே மரணத் தண்டனை கொடுக்கப்பட்டது.

இந்த முடிவு கடுமையாக தோன்றலாம். பழைய ஏற்பாட்டு சட்டங்களுள் புகலிடம் தேடுகிறவர்களுக்கு கூறுவதாவது, விபசாரம் செய்கிறவர்களுக்குத் விவாகரத்து செய்ய அனுமதியில்லை. அவர்களுக்கு கிடைக்கும் தண்டனை, மரண தண்டனையாகும். கல்லெறிந்து கொலை செய்யப்படுவார்கள். விவாகரத்துசெய்ய உரிமை கொடுக்கும் நியாயபிரமாண சட்டத்தின் முந்திய பாகத்தை எவ்விதம் கொண்டு நடத்த முயற்சிக்கிறார்களோ அதேவிதமாய் இதன் பிந்தின பாகத்தை நடத்த முயற்சிக்கவேண்டும்.


உதாரணமாக, கலாத்தியர் 3:10ல், இது தெளிவுபடுத்தப்படுகின்றது. "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே" யாக் 2:10ல் "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" எனக் கூறப்பட்டுள்ளது. எனவே நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க நம்மை ஒப்புக்கொடுத்தால் நியாயப்பிரமாணம் முழுவதையும் நாம் கைக்கொள்ள வேண்டும். ஒருவன் விவாகரத்து செய்ய நியாயப்பிரமாணத்தின் மூலம் வகைதேடினால் அந்த நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றியாக வேண்டும்.

நியாயப்பிரமாணத்தின் கடுமையினை எஸ்றாவின் புத்தகம் 9ம் 10ம் அதிகாரங்களில் கண்டுகொள்வீர்கள். விவாகரத்து, வேசித்தன முகாந்திரத்தின் நிமித்தம் அனுமதிக்கப்பட்டது. ஆனால் நாம், கிருபையின் காலத்திலுள்ளதால் விவாகரத்துக்கான அனுமதி செல்லுபடியாகாது.



"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது" (ரோமர் 6:14). ❑

# சிதைக்கப்படும் மொட்டுக்கள்!



சாந்தி பொன்னு

"டடி, என்னைத் திருப்பி கொண்டுபோய் மம்மி வீட்டில் விட்டிடாதேங்கோ. மம்மியும் அந்த ஆளும் என்னை..." மழலை மாறாத மொழியிலே, தமிழும் ஆங்கிலமும் கலந்து விம்மி வெடித்தது அந்தப் பிஞ்சு உள்ளம். அலைகளின் பேரிரைச்சலுக்கும் மேலாக இரைந்து எழும்பிய டடியின் இதயஓலம், சற்றுநேரத்தில் அடங்கிவிட்டது. இது கற்பனையும் அல்ல; மேற்குலக நவநாகரீக கதையுமல்ல. நம்மவர்களின் குடும்பம் ஒன்றில் மௌனமாக ஓலமிடும் ஒரு பிஞ்சு மொட்டு சிந்தும் கண்ணீர் துளிகள்தான் இது.

"...அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" என்று கர்த்தரிடம் கேட்டுப் பெற்றுக் கொண்ட சாலொமோனின் ஞானத்திற்கு வந்த முதல் சவால் ஒரு பிள்ளையைக்குறித்த வழக்கு தான். வந்தவர்களோ புருஷன் யார் என்றே தெரியாத நிலையில் பிள்ளையைப் பெற்ற இரண்டு ஸ்திரீகள். ஒருத்தியின் பிள்ளை செத்துப்போக, உயிரோடிருக்கும் பிள்ளைக்காக இருவரும் வாதாடினார்கள். சாலொமோன் எடுத்தான் ஒரு பட்டயம். பிள்ளையைப் பிளந்து இருவருக்கும் கொடுக்கும்படி கட்டளைக்கொடுத்தான். உடனே வெடித்தது உண்மை. பிள்ளையின் உண்மையான தாயின் குடல்துடித்தது. ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கும் பிள்ளையைக் கொல்ல வேண்டாம். அதை அவளிடமே கொடுத்துவிடும் என்றாள் அவள். மற்றவளோ, அது எனக்கும் வேண்டாம் உனக்கும் வேண்டாம்; பிளந்து போடுங்கள் என்றாள் (1ராஜா.3:16-27). திருமண உறவுக்கு அப்பாலே தவறான வழியில்தான் அப் பிள்ளையை அந்தத் தாய் பெற்றெடுத்திருந்தாள். அப்படியிருந்தும், அக்குழந்தையின் பெறுமதியை அவள் உணர்ந்திருந்தாள். இல்லாவிடில், அவளது குடல் துடிதுடித்திராது. தன் குழந்தைக்கு எந்தக் கேடும் வரக்கூடாது என்பதற்காக அவள் தன் சந்தோஷத்தையும் இழக்கத் தயாராயிருந்தாள்.

இப்படியிருக்க திருமண பந்தத்தின் அன்புப் பிணைப்பிற்கு அடையாளமாகப் பெற்றெடுக்கின்ற பிள்ளைகளுக்கு இன்று ஏன் இந்தக் கதி? இதற்கு என்ன காரணம் அல்லது யார் காரணம்? தேவ சமுகத்தில் கைப்பிடித்து, தேவ ஆசீர்வாதத்தோடு வாழ்க்கையை ஆரம்பிக்கின்ற கிறிஸ்தவ தம்பதியினர் பொறுப்பற்ற விதத்தில் நடக்க முடியுமா? கிறிஸ்தவ தம்பதியினரே, உங்களுடைய சொந்த சந்தோஷ நியாயங்களுக்காக பரிசுத்த விவாகத்தைக் குலைச்சலாக்கிப்போடுவது எந்தவிதத்தில் நியாயம்? பெற்றெடுத்த பிள்ளைக்காக உங்களை அர்ப்பணிக்க முடியாத உங்களிடம், பிள்ளையைக் குறித்து கர்த்தர் கணக்குக் கேட்கும்போது என்ன பதில் சொல்வீர்கள்?

## பிள்ளைகள் என்பவர்கள் யார்?

"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" (சங்கீதம் 127:4). திருமண பந்தத்திலே இணைந்த ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் வாரிசாகப் பிறக்கின்ற ஜீவன்தான் பிள்ளை. இந்தப் பிள்ளை தேவனால் பெற்றோருக்கு அருளப்படுகிற பெறுமதிமிக்க திருமணப் பரிசு, ஈவு; தேவன் அருளும் ஆசீர்வாதத்தின் ஊற்று. மாறாக, இந்தப் பிள்ளைகள் பெற்றோருக்குச் சுமைகள் அல்ல; பழைய ஏற்பாட்டுக் காலத்தைப்போன்றே இன்றும் பல சமுதாய அமைப்புகளில் பிள்ளை இல்லாத தம்பதிகள் அற்பமாகவே எண்ணப்படுகிறார்கள்.

ஆதாமுக்கு ஏவாளைக் கொடுத்த தேவன், "பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" என்றுதான் ஆசீர்வதித்தார். ஆபிராமை அழைத்த தேவன், உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன், உன் சந்ததிக்கூடாக பூமியிலுள்ள சகல சந்ததிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றுதான் ஆசீர்வதித்தார். எத்தனையோ தடவைகள் சாராயின் கற்புக்கு கடும் சோதனை வந்தது. அந்த நேரத்தில் ஆபிரகாம் சுய

நலத்தோடு தன்னைத் தப்புவிக்க வழிபார்த்தாரே தவிர, தன் மனைவியைக் காப்பாற்ற முயற்சி செய்யவே இல்லை. ஆனால், சாராளின் கற்பு மாசுபட தேவன் அனுமதித்தாரா? இல்லை. அந்நிய ராஜாக்களென்றும் பாராமல் அவர்களை வாதித்து அவர்களோடு இடைபட்டார் நமது தேவன், ஏன்? சாராளின் வயிற்றில் பிறக்கப்போகும் பிள்ளையைக் குறித்த வைராக்கியம் தேவனுக்கு.

"என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்" "என் கருவை உம்முடைய கண்கள் கண்டது" என்று தாவீது பாடிவைத்திருப்பதைச் சிந்திக்க வேண்டும். "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன்" என கர்த்தர் எரேமியாவுக்குக் கூறிய இந்த வார்த்தைகளை நாம் உதாசீனம் செய்யலாமா! தாயின் வயிற்றில் உருவாகும்முன் ஒவ்வொரு மனுஷனையும் தேவன் அறிந்திருக்கிறார் என்றால், அவனுடைய வாழ்வு தேவனுக்கு எத்தனை முக்கியம் என்பது தெளிவு. பிறக்கும் முன்பே, ஈசாக்குக்கும் யோவான்ஸ்நானனுக்கும் பெயரிட்ட தேவன், சிம்சோனின் பிறப்பைக்குறித்து அவன் பிறக்கும்முன்பே மனோவாவிற்கும் அவனது மனைவிக்கும் அறிவிக்கத் தவறவில்லை. ஆக, ஒவ்வொரு பிள்ளையைக் குறித்தும் தேவனுக்கு ஒரு சித்தம் உண்டு, திட்டம் உண்டு என்பது தெளிவு. அதனைக் குலைத்துப்போட எந்தவொரு மனிதனுக்கும் அதிகாரமில்லை. அது தேவனுக்கு விரோதமான பாவம்.

### தேவனுடைய அநாதி திட்டம்:

ஆதாம் ஏவாள் குழந்தைகளாகப் படைக்கப்படவில்லை. தேவசாயலில் படைக்கப்பட்ட அவர்கள், தங்களைப்போலவே பிள்ளைகளைப் பெற்று, ஒரு சந்ததியை உருவாக்கும் கிருபையையும் பெற்று காணப்பட்டனர். இவர்களின் சந்ததியினூடாக மனுக்குலத்தை மீட்கும்படியாக, பாவத்திற்குள் தள்ளப்பட்ட மனிதர்களை இரட்சிக்கும்படியாக வந்த ஆண்டவராகிய இயேசு, ஒரு முதிர்ந்த மனிதனாகவோ, அபூர்வ பிறவியாகவோ, விநோதமான அவதாரமாகவோ வரவில்லை. அவர் ஒரு சிறுகுழந்தையாகவே வந்து பிறந்தார். குழந்தைப் பருவம், சிறுபிராயம், வாலிப்பிராயம் என்று கடந்து, ஒரு மனிதன் வாழவேண்டிய வாழ்க்கையை இயேசுவானவர் தாமும் வாழ்ந்து காட்டினார்.

"ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி எனப்படும். அவர்கள் வந்து: அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்." (சங்.22:30, 31) இன்னும் பிறக்காத சந்ததியினர், இன்று வாழும் பெரியவர்களாகிய நமது உண்மைத்துவத்தில்தான் தங்கியிருக்கின்றன என்பதையே இந்த வார்த்தை தெளிவுபடுத்துகிறது. இன்று வாழுகின்ற நமக்கு இது பெரியதொரு பொறுப்பு.

மனித சந்ததி, சந்ததிப் பெருக்கம் என்பவை தேவனுடைய அநாதி திட்டம். தனித்தனி மனிதராக மட்டுல்ல; ஒரு பரிசுத்த சந்ததியாகத் தம்மைச் சேவிக்கவேண்டும், நித்தியமாய் தம்மோடு வாழ வேண்டும் என்பதுவும், சந்ததிகளையும் சந்தானங்களையும் ஆசீர்வதிப்பதுவும் தேவனுடைய அநாதி தீர்மானமாக இருக்கின்றது.

குடும்பமே தேவனுடைய அநாதி திட்டம். பெற்றோருக்கு பிள்ளைகளை ஈவாகக்கொடுப்பது தேவனுடைய சித்தம். தேவனுக்கேற்ற வழியில் பெற்றோர் அவர்களை வளர்க்கவேண்டும் என்பது தேவ கட்டளை. பிள்ளைகள் காப்பாற்றப்படுவதும், தேவ பயத்தில் வளர்க்கப்படுவதும், தேவனைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதும், நமது அடுத்த சந்ததிக்கு மாத்திரமல்ல, இன்னும் பிறக்காத நமது சந்ததிகளுக்கும் நாம் செய்யும் பெரிய சேவை. தமது பிள்ளைகளுக்கு தேவனைக்குறித்த அறிவைப் புகட்டாத எந்தவொரு பெற்றோரும் அந்தச் சங்கிலித் தொடரை வேரோடு அறுத்துப் போடுகின்ற பாவத்தைத்தான் செய்கிறார்கள் என்பதுதான் உண்மை.

### இயேசுவும் பிள்ளைகளும்:

அன்று யூத சமுதாயத்தில் சிறுபிள்ளைகளும் பெண்களும் கணக்கெடுக்கப்படுவதில்லை. அந்தச் சூழ்நிலையிலும் ஆண்டவர் சிறுபிள்ளைகளில் கொண்டிருந்த தமது அன்பை மரியாதையை வெளிப்படையாகவே வெளிப்படுத்தியதை மாற்கு 9:36-37ல் நாம் வாசிக்கிறோம். ஒரு சிறுபிள்ளையை தமது நாமத்தினாலே ஏற்றுக்கொள்கிறவன் தம்மை ஏற்றுக்கொள்கிறான் என்று சொல்லுமளவுக்கு இயேசு சிறுவர்களை நேசித்தார். மாத்திரமல்ல, ஒரு பிள்ளையைத் தம்முன் நிறுத்தி, "நீங்கள் மனந்

திரும்பி பிள்ளைகளைப்போல ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு திட்டவட்டமாகச் சொன்னார் (மத்.18:1-6). சிறுபிள்ளைகள் கள்ளங் கபடற்றவர்கள் என்றதினாலா அப்படிச் சொன்னார். இல்லை, என்ன நேர்ந்தாலும், எந்தச் சூழலிலும் சிறுபிள்ளைகள் தங்கள் பெற்றோரை நம்புவார்கள்; அவர்களையே முற்றிலும் சார்ந்துகொள்வார்கள். அப்படியே, ஒருவன் தேவனைச் சார்ந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கவே இயேசு இவ்வாறு கூறினார். இயேசுவே நேசிக்கிற சிறுபிள்ளைகளை நாம் உதாசீனம் செய்யலாமா?

**நிர்க்கதியாகும் சிறுவர்கள்:**

பிறக்கின்ற பிள்ளைகள் முற்றுமாகத் தங்கள் பெற்றோரிலேயே தங்கியிருக்கிறார்கள். பின்னர் வளர வளர, தங்கள் காரியங்களைத் தமது விருப்பப்படி செய்ய எத்தனிக்கிறார்கள். அவர்களுக்கென்று விருப்பங்கள் தெரிவுகள் என்று ஏற்பட்டாலும், அவற்றைப் பூர்த்திசெய்ய அவர்களால் முடியாது; பெற்றோர் வேண்டும். குடும்பம் என்பது என்ன? பிறக்கின்ற பிள்ளைகள் முதல் முதல் வாழ்வை அறிந்துகொள்வது இந்தக் குடும்ப கட்டமைப்பில்தான். பிள்ளைகள் வளரும்போது, அவர்களுடைய உணர்வும் வளர்ச்சியடைகிறது, அறிவும் வளருகிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கும் மனம் இருக்கிறது. தவறுகளை வெளியே சொல்லத் தெரியாவிட்டாலும், அவர்களுக்கும் ஏதோவொன்று புரிகிறது. பிள்ளைகளும் உடல்ரீதியாக மாத்திரமல்ல, உளரீதியாகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதை பெரியவர்களான நாம் உணரவேண்டும். பிள்ளைகளை சக மனிதராகக் கணிக்க நாம் பழகவேண்டும்.


சிறுவர் துஷ்பிரயோகம் என்பது இன்று சர்வ சாதாரணமாகப் பேசப்படுகிற விடயமாகிவிட்டது என்பது எத்தனை வேதனைக்குரிய காரியம். இந்தப் பதத்தை உள்ளபடியே பார்த்தால், மனிதர், சிறுவர்களை தங்கள் துஷ்டத்தனத்திற்கு தவறாகப் பிரயோகிக்கிறார்கள் எனலாம். ஒரு விடயத்தை நாம் உணரவேண்டும். அறியாப் பருவத்திலேயே பெற்றோரினால் கைவிடப்படுதல், வீட்டிலேயே தமது பெற்றோரின் வீம்பினாலே பாதிக்கப்படுதல், வேலைக்கு அமர்த்தப்படுதல், அவ்விடங்களில் துன்புறுத்தப்படுதல், உணவின்மையால் கஷ்டப் படுதல், களவு காரணமாக அகப்பட்டு அடிபடுதல், கல்வி மறுக்கப்படுதல், யுத்தத்தில் நிறுத்தப்படுதல் போன்ற பல காரியங்கள் இந்தச் சிறுவர்களின் வாழ்விலே பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது என்பது நமக்குத் தெரியாதா!

இந்தவகையில், உடலில் ஏற்படுகின்ற வலி காலத்தில் மாறக்கூடும்; காயங்கள் ஆறக்கூடும்; பசி பறந்துபோகக்கூடும்; ஆதரவுக்கு ஒரு கூரை கூடக் கிடைக்கக்கூடும். ஆனால், ஒரு சிறுபிள்ளை பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும்போது, அது ஆண்பிள்ளையாக இருந்தாலும்சரி, பெண்பிள்ளையாக இருந்தாலும்சரி, அதின் தாக்கம், எதிர்காலம் மிகவும் பயங்கரமான விளைவை உடையதாக இருக்கும். அதிலும், பெண்பிள்ளைகள் வாழ்வோ சிதைந்தே போகிறது. காமவெறிகொண்ட ஒரு சில அரக்கர்களின் கொடூரச் செயலினால் பிள்ளைகள் மொட்டிலேயே சிதைக்கப்பட்டுப் போகிறதை ஏன் மனிதன் தெரிந்துகொண்டும் உணராதிருக்கிறான்? இந்தப் பிள்ளைகளில் சிலர் கொல்லப்படுகிறார்கள்; ஆனால் பலர் வடுக்களோடு வாழுகிறார்கள். அது இன்பமான வாழ்வாக இருக்குமோ?

காமமும் மோகமும் இன்று உலகத்தில் எங்கும் தலைவிரித்தாடுவதற்குக் காரணம் யார்? நாமேதான். உணர்ச்சிகளை தூண்டிவிடும் சினிமா, அவற்றை வெளிச்சம்போட்டுக் காட்டும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், குடும்பமாய் குந்தியிருந்து பார்க்கின்ற பெரியவர்கள், சுயசந்தோஷத்தையே முக்கியப்படுத்தும் பெற்றோர்கள், அதிலும் முக்கியமாக தாய்மாரும், பணம் உழைப்பது ஒன்றையே கருத்தில்கொண்டு பிள்ளைகளை வேறு நபர்களின் பராமரிப்பில் விட்டுப்போகும் பெற்றோரும், தமது



பிள்ளைகள் கணனிக்கு முன்னாக என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என்றுகூட கவனிக்க நேரமற்ற பெற்றோரின் "பிஸி"யான வாழ்க்கையும், தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகள் என்றுகூட நினைக்கமுடியாத அளவுக்கு வெறிகொண்டிருக்கும் வயதுமுதிர்ந்த பேரர்மாரும்.... இவர்களில் யாரைக் குற்றஞ்சொல்ல?



### சிறுவர்கள் சிறுவர்கள்தான்:

பிள்ளைகள் இயல்பாகவே எதையும் நம்புகிற சுபாவத்தை உடையவர்கள். அவர்கள் தங்கள் பெற்றோரை பெரியவர்களை நம்புகிறார்கள். இல்லையானால், அப்பாவுடன் அண்ணாவுடன் மாமாவுடன் வெளியே செல்ல மறுப்பார்களா? பிள்ளைகளின் வளர்ச்சி, நடத்தை, பழக்கவழக்கம் எல்லாவற்றுக்கும் பொறுப்பானவர்கள் அவர்களின் பெற்றோரும் பெரியவர்களுமே. பிள்ளைகளைக் குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்களும் அவர்களே.

தனது பாதுகாப்பைக்குறித்து நிச்சயப்படுத்த ஒரு சிறுபிள்ளைக்குத் தேவையானது, தன்னைப் பராமரிப்பவர் கொடுக்கும் ஒரு அன்பின் பார்வை, ஒரு அன்பின் அரவணைப்பு அவ்வளவும்தான். அறிவுபூர்வமான விளக்கம் அவர்களுக்கு அவசியமில்லை. அவர்கள் நம்மை நம்பிவிட்டால் போதும், அண்டிக்கொள்வார்கள். தமது அறியா பருவத்தில் அதிலும் இரண்டு மாதமளவிலேயே தன் தாயை அடையாளங்கண்டு புன்சிரிப்பு உதிர்க்கும் சிறு குழந்தை, அந்தத் தாய் தகப்பன் எவ்வளவுதான் அடித்தாலும் திட்டினாலும், தன் பெற்றோரின் கால்களையே கட்டிப்பிடிக்கும் என்பது சொல்லியா தெரியவேண்டும். ஒரு சிறிய சொக்கலேட்டுக்கும் இனிப்புக்கும் கண்சிமிட்டும் களங்கமற்ற குழந்தைகளைச் சிதைக்க எப்படித்தான் மனம் வருகிறதோ? "ஐயோ அம்மா" என்று அலறும் சத்தமாவது அந்த கொடிய அரக்கர்களின் செவிகளை ஏன் துளைக்கிறதில்லை?

### பாவத்தின் கோரம்:

கிறிஸ்தவ விசுவாசியே, உனக்குத் தெரிந்த ஒன்றை உனக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பாவம் எவ்வளவு கோரமாக தாண்டவமாடுகிறது பார்த்தாயா? இது கடைசிக்காலம், இப்படித்தான் நடக்கும் என்று நாம் அசட்டையாக இருக்கலாமா? உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுகிறவர்களுக்காக நீ மனஸ்தாபப்படுகின்றாயா? அல்லது, சீறி எழுவாயா? உன் வீட்டுப் பிள்ளை இந்தக் கொடுமைக்கு இலக்கானால் நீ என்ன செய்வாய்? தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தமுடியாமல் காமம் கட்டவிழ்க்கப்பட்ட நிலையில் சமுதாயத்திலும் திருச்சபைக்குள்ளும் சிலர் திண்டாடுவது உண்மைதான். என்றாலும், அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் வழி உண்டு. இந்தக் கொடுந் தீமைக்கெல்லாம் காரணமான சாத்தான் உண்மையில் சிலுவையில் தோற்கடிக்கப்பட்டவன் என்ற சத்தியம் இன்று மறைக்கப்பட்டு வருகிறது. அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்ற யதார்த்தம் குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது. நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும், எல்லா சாபங்களுக்காகவும், மனுக்குலத்தையே தேவனைவிட்டுப் பிரித்துப்போடுகிற சகலத்துக்காகவும் இயேசு சிலுவையில்தாமே கிரயத்தைச் செலுத்தி வெற்றிசிறந்தார் என்ற நீதி இன்று கிறிஸ்தவர்களாலேயே தூக்கிவீசி எறியப்படுவது சிந்திக்கத்தக்க ஒன்று.

இயேசு வெற்றி சிறந்தவர். ஆகவே, எவன் தன் மாம்ச பெலவீனங்களை உணர்ந்து, அவரண்டையில் விழுந்து, ஆண்டவரே என்னைத் தொட்டுக் குணமாக்கும் என்று கேட்கிறானோ, கேட்கின்ற எவனையும் அவர் புறந்தள்ளவே மாட்டார். இந்த சத்தியத்தை நாம் ஏன் மறைக்கவேண்டும்? செய்த பாவத்தை மறைக்க, சாட்சிகளை மறைக்க, சாட்சி இல்லாமலே காரியங்களை நடத்திமுடிக்க, பொய் சாட்சிகளை ஏற்படுத்த எல்லாமே மனிதனுக்கு கற்றுத்தர வேண்டியதில்லை. சாட்சிகளைத் தேடும் உலக நீதிமன்றங்களும் உண்மை தெரிந்தும் எதுவும் செய்யமுடியாத நிலையில் திண்டாடுகிறது. ஆனால், தேவனுடைய நீதிமன்றத்தில் யாராலும் எதனையும் மறைக்கமுடியுமா?

### வினையாகும் விளைவுகள்:

பிள்ளைகளின் வாழ்வைச் சிதைக்கிறவர்கள், பிள்ளைகளை மாத்திரமா சிதைக்கிறார்கள்? ஒரு சந்ததியையே சிதைக்கிறார்கள். தாம் மாத்திரம் தான் இந்த உலகில் வாழமுடியும் என எண்ணுகி றார்களா இந்தப் பெரிய கனவான்கள்? தங்கள் அற்ப ஆசைக்காக, ஒரு சில நிமிட அசிங்கமான உணர்வுக்காக ஒரு பிள்ளையைப் பலியாக்கும் இவர்கள், தேவனுடைய திட்டத்திலேயே தங்கள் அசுத்தமான கைகளை பதிக்க முற்படுகிறாகள் என்பதையோ, அதன் பயங்கர விளைவுகளையோ ஏன் நினைத்துப் பார்ப்பதில்லை?

பெற்றோரே, உங்கள் பிள்ளைகளைக் குறித்த உங்கள் பொறுப்பில் நீங்கள் தவறுவீர்களாகில், நீங்கள் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்கிறீர்கள்.

பெரியோர்களே, வயதில் மூத்தவர்களே, பிஞ்சு கைகளை, தோல்களை தொடும்போது மனதிலே கருணையும் அன்பும் ஊற்றெடுக்கவேண்டியிருக்க, காமவெறியினால் தூண்டப்பட நீங்கள் இடமளிப்பீர் களாகில், தேவனுடைய அநாதித் திட்டத்தையே நீங்கள் குலைத்துப்போடுகிறீர்கள். இதினால் பயமின்றி பாவம் செய்தவர்களாவீர்கள்.

ஏழ்மையின் நிமித்தமாக உங்கள் பிள்ளை களை காமத்துக்கு விற்றுப்போடும் தாய் தகப்பன் மாரே, ஒரு விபசார சந்ததி உருவாக நீங்கள்தான் காரணராக மாறுகிறீர்கள். உறவென்று சொல்லி, உங்கள் அரவணைப்பில் மகிழும் சிறுவர்களைக் காமக்கண் கொண்டு பார்க்கும் உறவுகளே, நீங்கள்தான் கொலையாளிகள்.

ஒரு அழகான ஓக்கிட் செடியிலிருந்து பல மொட்டுகள் தோன்றின. ஒரு அணில் வந்து அதில் சில மொட்டுக்களைக் கடித்துச் சிதைத்துவிட்டது. குறித்தக் காலத்தில், அந்த மொட்டுக்கள் யாவும் மலர்ந்தன. சிதைக்கப்பட்ட மொட்டுக்களும் மலர்ந் தன. ஆனால் அவை தங்கள் அழகை இழந்து காட்சியளித்தபோது, சிதைக்கப்பட்ட வாழ்வுகளும் இப்படித்தானோ என்று எண்ணத் தோன்றியது. அழகு அழகான மொட்டுக்கள் நாளாந்தம், இரவு பகல் என்றில்லாமல் சிதைக்கப்படுகின்றனவே. ஓ... கிறிஸ்தவனே, உன் பொறுப்பு என்ன? இன்றைய காலத்திலே நீ என்ன செய்துகொண்டிருக்கின்றாய்? உன்னுடைய திருச்சபை என்ன செய்துகொண்டு இருக்கின்றது? ❑

## கவித்துளிகள்

(எஸ். தர்மகுலசிங்கம்)

### இறையாசி பொழிந்திடுவார்

இடுக்கமான வழிதனிலே
இயேசுவோடு நடக்கையிலே
துடுப்பாய் மாறி துணை நின்று
துன்பம் கண்ணீர் துடைத்திட்டு
தடுப்புச் சுவரைத் தகர்த்தெறிந்து
இடுக்கண் மாற்றி இன்னல் போக்கி
இடையறாது அன்புகூர்ந்து
இறையாசி பொழிந்திடுவார்.



### சீக்கிரமாய் வந்திடுமே!

சீயோன் கன்மலையே
சீக்கிரமாய் வந்திடுமே
சீ என்ற என் பாவம்
சீக்கிரமாய் மறைந்திடுமே
சீரற்ற என் வாழ்வை
சீராக்க வந்திடுமே
சீரழிந்த என் வழியை
சீர்செய்து நடத்திடுமே



### போதனை கேட்டிட

தேவனை நோக்கிக் கதறிடும் வேளையில்
வேதனை அம்புகள் வேகமாய் மறைந்திடும்
போதனை கேட்டு புதுப்பெலன் அடைந்திட
சாதனைத் துளிகள் சாகரமாய் சூழ்ந்திடும்





—வஷ்னீ

# இலங்கை திருச்சபைகளின் எதிர்கால நம்பிக்கை, வளரும் சிறார்களே!



ஒவ்வொரு நாட்டிற்கும் உரிய சொத்து சிறுவர்களே. நாட்டின் எதிர்காலத்தின் நம்பிக்கை அவர்களே. இலங்கையிலுள்ள திருச்சபையின் எதிர்காலம் பிரகாசமாக வளமானதாக அமைய வேண்டுமாயின், நம்முடைய இளம் சிறு பிராயத்தவர்களை நாம் பாதுகாத்துக்கொள்வது அவசியமானதாகும்.

## யார் இந்த சிறார்கள்?

சிறுவர் என்பது இலங்கை சிறுவர் சாசனப்படி 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவராவர். இலங்கை சனத்தொகைப் புள்ளிவிபரங்களின்படி 1995 இல் 27.7 சதவீதம் சிறுவராவர். பிறந்த குழந்தை முதல் 18 வயதுவரையிலான அனைவரும் சிறார்கள் என்ற பருவத்தைச் சேர்ந்தவர்களாவார்கள்.

## சர்வதேச சிறுவர் தினம்?

சர்வதேச சிறுவர் தினமானது, இலங்கையில் ஒக்டோபர் 1ம் திகதி கொண்டாடப்படுகின்றது. இந்தியாவில் முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேருவின் பிறந்த தினத்தில் நவம்பர் 14ம் திகதி கொண்டாடப்படுகின்றது. பொதுவாக, வேறுசில நாடுகளில் ஜூன் 1ம் திகதி சர்வதேச சிறுவர் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்ற நோக்கம் சிறுவர்களுக்கெதிரான எல்லாவித துஷ்பிரயோகங்களையும் நீக்குவதை அடிப்படையாக கொண்டதாகும்.

## சிறுவர் துஷ்பிரயோகம் என்ன?

சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், சிறுவர்களைக் கடத்துதல், சிறுவர்களின் கல்வியைத் தடுத்தல், பாலியல் தேவைக்குப் பயன்படுத்துதல், அடிமைப்படுத்தல், குறைந்த சம்பளத்தில் கடின வேலைக்கு அமர்த்துதல், வீட்டு எஜமானிகளின் தண்டனைக்குட்படுதல், நெருப்பினால் சூடு, உணவின்றிப் பட்டினி போடல், வீட்டைவிட்டுத் துரத்துதல், பேராளி குழுக்களில் பயன்படுத்துதல், சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம், பாலியல் உறுப்புக்களைத் தொடுதல், நீலப்படங்கள், வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுதல், போன்ற கொடூர செயல்களால் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்குள்ளாகின்றார்கள். சிறுவர்களின் பாதுகாப்பு, குடும்பத்தில் விழிப்புணர்வு, கிறிஸ்தவ வாழ்வுநெறி, அறியாமையை நீக்குதல், சிறுவர்களைப் பாதுகாத்தல் போன்றவை கடைப்பிடிக்கப்படுவது மிக மோசமாக சிதைவடைந்துள்ளது.

## துஷ்பிரயோகம்பற்றிச் சொல்லுதலும் அதனை வெளிப்படுத்துவதில் உள்ள கஷ்டமும்

வன்முறையைப் பற்றி வெளியில் சொல்லுதல் மிகவும் கஷ்டமாக இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. பாதிக்கப்பட்ட



(இக்கட்டுரையிலுள்ள தகவல் குறிப்புகள் யாவும் இலங்கையிலுள்ள தினசரி பத்திரிகைகள் ஊடாக பெற்றுக்கொண்டவைகளாகும்.)

சிறார்கள் தமது வெட்கம், பயமுறுத்தல்கள், குடும்பத்தில் பிளவு, பிரச்சனை சச்சரவு போன்ற வற்றினால் ஏற்படும் பயம், அல்லது என்ன நடந்தது என விளங்கிக்கொள்ள முடியாத நிலைமை ஆகிய உணர்வுகள் சில காரணமாக துஷ்பிரயோகம்பற்றி சொல்ல அச்சப்படுகின்றனர்.

## துஷ்பிரயோகம் சட்டவிரோதமானவை

சமுதாயத்தில் நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமான பலவித சமூகப் பின்னணியையும், சமய கோட்பாடுகளையும், கலாச்சாரத்தையும், கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் நாம் கொண்டிருந்த போதிலும், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்முறை சம்பந்தமான உண்மைகளையும் பிழைகளையும் இனங்கண்டு கொள்வது மிக முக்கியமான ஒன்று. பாலியல் துஷ்பிரயோகத்திற்கு பாதிக்கப்பட்டவர் பொறுப்பு அல்ல என்பதும், நாட்டில் பாலியல் துஷ்பிரயோகம் சட்டவிரோதமான ஒரு குற்றம் என்பதும், அது ஆண்டவருக்கு விரோதமான செயலாக இருக்கின்றது என்பதையும் நாம் அனைவரும் தெளிவாக புரிந்திருக்க வேண்டியது அவசியம்.

## விசாரணை

பாதிக்கப்பட்ட சிறார்களின் வயது 16க்கும் மேற்பட்டது எனில், பொதுவாக பொலிசார் மாத்திரமே விசாரிப்பார்கள். பாதிக்கப்பட்டவர் 16 வயதுக்குட்பட்டவர் எனில் விசாரணை இருவித பகுதிகளாக அமையும். துஷ்பிரயோகம் மற்றும் குற்றவியல் பகுதிக்கான விசாரணைப் பொறுப்பு பொலிசாருடைய கடமையும், துஷ்பிரயோகம் திரும்பவும் நடைபெறாமல் சிறார்களுக்கு நல் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பு பிள்ளை நலம் பேணுவோரின் (Child Welfare Officer) பொறுப்பாகவும் அமையும். விசாரணை, பரிசோதனை நடத்துவதின் மூலம், உடல்ரீதியான ஆதாரங்கள் அடையாளங்களை ஒரு சாட்சிகளைக் கொண்டு சிலரது பாலியல் துஷ்பிரயோக செயற்பாடுகளை சமுதாயத்தில் ஆதாரத்துடன் நிரூபிக்கலாம்.

உண்மையில், பாலியல் துஷ்பிரயோகம்பற்றி வெளியே கூறுவது மிகக் கடினமானது. எனினும் நடைபெற்ற சகல உண்மைகளையும் அப்படியே சொல்லும்படி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். இது மிகவும் கஷ்டமான விஷயமாக இருப்பினும் தகவல்களை சொல்லுவது நல்லது. இது சட்ட நடைமுறை ஒழுங்குமுறைமைகளைப் (The Legal System) பின்பற்ற உதவியாக அமையும்.

## சிகிச்சை (Treatment Options)

நீங்கள் அல்லது உங்கள் அன்புக்குரியவர் எவராவது பாலியல் வன்முறைக்குப் பலியாகி இருந்தால் அதை இனி எந்தவிதத்திலும் மாற்றி விட முடியாது. ஆனால் இப்பாதிப்பு உங்கள் வாழ்வை சீரழிக்க அனுமதிக்கக்கூடாது. ஆகவே, நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இயன்றளவு இனி உசிதமான உதவியைப் பெறுவதன் மூலம் நீங்களும் உங்கள் குடும்பமும் இதிலிருந்து மீண்டு, ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வை மேற்கொள்ள முற்படவேண்டும். உரிய சிகிச்சைகளைத் தேர்ந்தெடுப்பது பற்றியும், உங்களுக்கு உகந்த மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது பற்றியும் உளவளத்துணையாளரின் (Counsellor) உதவியையும் சிகிச்சை நிபுணரிடம் கேட்கவேண்டிய கேள்விகள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

## இலங்கையின் நிலை....

அன்று சிறார்கள் யுத்தத்தில் ஈடுபட்டார்கள். இன்றோ இச் சிறார்களில் அநேகர் தெருவில் அலைகின்றார்கள், பிச்சை எடுக்கின்றார்கள். தவறான பாலியல் வியாபாரிகளினால் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள், குறையுணவு, கவனமின்மை காரணமாக மில்லியன் கணக்கான பிள்ளைகள் மரிக்கிறார்கள். குழந்தைகள் மீதான தாக்குதல்கள், கருவறையில் அழிக்கப்படுபவை கணக்கிலடங்காமல் பெருகுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் அதிகளவில் இடம் பெறும் நாடாக தற்போது இலங்கை மாறிவிட்டது.

ஏறத்தாள 5 இலட்சம் சிறார்கள் உள்நாட்டு போரில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

UNICEF இன் கணிப்பீட்டின்படி 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட சுமார் 30,000 சிறுவர் கடற்கரைப் பிரதேசங்களில் தன்னினச் சேர்க்கைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆண்,பெண் பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்குப் பயன்படுகின்றனர். எயிட்ஸ் போன்ற கொடிய நோய்களும்கூட இவர்களைத் தொற்றுகின்றது. "2012ல் முதல் ஆறு மாதங்களுக்குள் நாட்டில் 700 இற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் துஷ்பிரயோக சம்பவங்கள் இன்று அதிகரித்துள்ளன. கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்கள் நாட்டில் பிரதான போதை விற்பனை மாவட்டங்களாக மாறியிருப்பதுடன், இவற்றை மையமாகக் கொண்டே நாட்டில் ஏனைய பாகங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், போதை விற்பனை இடம் பெற்று வருகின்றன. யாழ் பொது சுகாதார சேவை வெளியிட்ட குறிப்பில் யாழ்ப்பாணத்தில் 2012ன் முதல் 5 மாதங்களில் 12 வயதிற்கு குறைந்த 75 பேர்



கர்ப்பம் தரித்திருப்பதாகவும், இவர்களில் அநேகர் பாடசாலை மாணவிகள் எனவும் கூறுகின்றது.

"2011 ஆம் ஆண்டில் 5,108 சிறார் துஷ்பிரயோகமும் இந்த வருடம் ஏப்ரல் வரை 9,446 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. 2011ல் 16 வயதிற்குக் குறைந்த 1,169 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்" என எதிர் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரேன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.(15 ஜுலை 2012 பத்திரிகை செய்தி) அண்மையில் வெளியிடப்பட்ட புதிய கணிப்பின்படி, "90 சதவீதமான சிறார்கள் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தமக்கு நன்கு அறிந்த நம்பிக்கைக் குரிய நபர்களினாலேயே இவ்வாறு துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ளனர். தம் குடும்பத்தில் நன்கு அறியப்பட்டவர்கள், அயலவர்கள், உற்ற உறவினர்கள் மற்றும் ஆசிரியர்களால் பல சிறுவர்கள் பாலியல் வல்லுறவு சம்பவங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்" என சட்ட மா அதிபர் திணைக்கள பிரதி சொலிஸ்டர் ஜெனரல் சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

### கிறிஸ்தவனே விழித்தெழு!

கிறிஸ்தவர்கள் என்ற ரீதியில், ஆரோக்கியமான ஒரு சூழலை எதிர்கால சந்ததியினருக்கு சிறார்களுக்கு வழங்கவேண்டியது அவசியம். கிறிஸ்தவ விசுவாச வாழ்வில், இன்று சிறார் பணிக்கு விசுவாசமும், துணிச்சலும், தேவ பயமுமுள்ள ஆண்களும் பெண்களும் தேவைப் படுகின்றனர். திருச்சபைகளில், இன்று சிறுவர் ஊழியம் என்பது அசட்டைப் பண்ணப்பட்ட ஒன்றாகவும், வெறும் விளையாட்டு, கதைபோன்ற முக்கியமற்ற ஊழியம்போல உணரப்படுகின்றது. இவ் இழிநிலை மாறவேண்டும். சிறார் ஊழியமானது சகல திருச்சபைகளிலும் தூய்மையாக முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கு தேவ ஊழியர்களும், சபையோரும், ஆசிரியர்களும் தங்கள் பங்களிப்பினை விளங்கிக்கொண்டு அதை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

இறையியல் கல்லூரிகளில் சிறுவர் ஊழியத்தைக்குறித்த பாடங்கள், பாடவிதானங்களில் கட்டாயமாக்கப்பட வேண்டும். இப்படிச் செய்யும் போதே சிறுவர்கள் மத்தியிலும், சமுதாயத்திலும், இலங்கை திருச்சபைகளிலும் பெருஞ்செல்வாக்கு செலுத்துவதாக அமையும். சிறுவர்களைக்குறித்த உண்மையான அர்ப்பணிப்புள்ள இதயமுள்ளோர்



திருச்சபைகளில் எழுந்து நின்று பணியாற்றும் காலம் இதுவே. திருச்சபையே, "நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால் (சிறுவர்களுக்கு) சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் ...குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு (சமுதாயத்திற்கு) உதவியாயிருக்கும்படி உனக்கு (திருச்சபைகளில், சமுதாயத்தில், அரச ஊழியத்தில்) ..மேன்மை கிடைத்திருக்கலாமே" (எஸ்தர் 4:14)

## சிறார் ஊழியத்திற்கு அழைப்பு

வளமான வருங்காலத்தை கட்டமைப்பதற்கான பணியானது, பாடசாலைகளிலும், பாலர் வகுப்புகளிலும், திருச்சபைகளிலும், குடும்பத்திலுமே முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற நிலை மாறவேண்டும். சிறார் ஊழியத்திற்கு அல்லது ஞாயிறு பாடசாலை ஆசிரியர் ஊழியத்திற்குரிய அழைப்பு இன்றைய திருச்சபை விசுவாசிகளிடத்தில் கொடுக்கப்படவேண்டும். வீடுகளில் தொலைக்காட்சிகளையும், வீடியோ கேம்சிலும், நாடகங்களைப் பார்ப்பதிலும் சிறார்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்காமல் ஞாயிறு பாடசாலையில் கலந்துகொள்ளும்படி பிள்ளைகளுக்குரிய ஊக்கத்தை திருச்சபை விடுக்கவேண்டும். ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு பயனுள்ள விடயங்களை, கதைகளை, வினா விடைகளை, கைவேலைகளை, புதிர்களை, வேதவசனங்களை கொடுத்து கற்பித்தல் வேண்டும்.



## எமது குழந்தைகள்தான் நமது எதிர்காலம். நாளைய தலைவர்கள்.

பிள்ளைகளின் சந்தேகங்களை நீக்கி, கிறிஸ்துவின் மீது அவர்கள் நம்பிக்கையை வைக்கவும், முழுமையாக தங்கள் வாழ்க்கையை கர்த்தருக்கு ஒப்படைக்கவும், தங்கள் முழு இருதயத்தையும் இயேசுவிடம் கொடுத்து அவருக்கு உகந்த பிள்ளைகளாக வாழவும் நாம் சிறார்களுக்கு உதவிசெய்ய வேண்டும்.

சிறப்பான ஊழியமானது, சிறுபிள்ளைகளுக்கானது. "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவ ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" எனவும் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" எனவும் இயேசு கூறியுள்ளார். சிறார் ஊழியம் சிறப்பானது மட்டுமன்றி, தங்கள் வாழ்நாள் முழுவதும் கைக்கொள்ளத்தக்கவிதத்தில் அவர்களுக்கு உபதேசிப்பதுமாக இருக்கின்றது. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி. 22:6). கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பர். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள். (சங் 92:15) ஆகவே, ஞாயிறு பாடசாலையில் மற்றும் சிறார்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களில் கொடுக்கப்படும் ஒழுக்கம், கல்வி, தேவனைப் பற்றிய அறிவு ஆகியவை மட்டுமே அவர்களின் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள எதிர்காலத்தில் அவர்களுக்கு உதவப் போகின்றது.

உங்கள் திருச்சபைகளிலுள்ள சிறார்களுக்கு ஆண்டவரின் அன்பை புரியவைத்து கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ள நற்பிரஜைகளாக உருவாக்க திருச்சபையிலுள்ள நீங்கள் இனி செய்யப்போகும் காரியம்தான் என்ன? எதிர்கால சந்ததியினரை, நாளைய தலைவர்களை உருவாக்கப் போகின்றீர்களா? அல்லது.....? இன்றைய இளம் சந்ததியினரை திக்கற்றவர்களாக வைத்துள்ளீர்களா? உங்கள் திருச்சபையின் எதிர்காலம் உங்களின் கைகளிலேயே உள்ளது! ❑

# கடனும் களவும்

**"துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்"**

(சங்கீதம் 37:21)

"உன்னுடைய பேனையைக் கொஞ்சம் தருவாயா, பரீட்சை எழுதிவிட்டு தந்து விடுகிறேன்." என்று ராமுவிடம் இருந்த அழகிய பேனையொன்றை இரவல் கேட்டான் ஜெகன்.

"சரி, ஆனால், அடுத்த வாரம் தந்து விடு, எனக்குப் பரீட்சை எழுத வேண்டும்" என்றான் ராமு. "நிச்சயம் தந்து விடுகிறேன்" என உறுதி கூறினான் ஜெகன்.

ஆனால், அடுத்தவாரம் ஜெகன் வந்தபோது ராமு பேனையைக் கேட்டான். ஜெகன் அதை வீட்டிலே மறந்து வைத்து வந்துவிட்டதாக கூறினான்.

அதன் பிறகு ஒவ்வொரு நாளும் ராமு தன்னுடைய பேனையைக் கேட்டான். ஒவ்வொரு நாளும் ஜெகன் தான் அதை மறந்து வந்துவிட்டதாக கூறி நாட்களைக் கடத்தினான். அந்த பேனையை அவன் திருப்பிக் கொடுக்க விரும்பவேயில்லை.

கடைசியில், ராமு, ஜெகனுடைய வீட்டுக்குப் போய் அவனிடம் பேனையை வாங்க வேண்டி இருந்தது. அத்துடன் ஜெகனுடைய அம்மாவிடமும் அதைக்குறித்து கூற வேண்டியதாய் போய்விட்டது. ஆனால் அதன் பிறகு, ஜெகனும், ராமுவும் நண்பர்களாக இருக்க முடியவில்லை.


யாராவது, எமக்கு ஒன்றைக் கொடுக்கக்கூடிய நல்ல மனம் உடையவர்களாய் இருக்கும்போது, அதை நாம் வைத்துக் கொள்ளக்கூடாது. நம்மை விரும்புகிற ஒருவருக்கு நாம் நன்றி உள்ளவர்களாய் இருப்போமானால், முடிந்தளவு நாம் கடனாக வாங்கிய பொருளை சீக்கிரமாய் திருப்பிக் கொடுத்து விடவேண்டும். "துன்மார்க்கன் கடன் வாங்கிச் செலுத்தாமற் போகிறான்" என்று வேதம் சொல்லுகிறது.

நாம் விரும்புகிற ஒரு பொருளை திரும்பக் கொடுப்பது ஒருவேளை கஷ்டமாக இருக்கலாம். ஆனால் நாம் கடனாக வாங்கிய பொருளை திரும்பக் கொடுக்க வேண்டுமென ஆண்டவர் கூறுகிறார். அதை நாம் வைத்துக் கொள்வதற்கு, அது எம்முடைய பொருளல்ல. அப்படி வைத்துக் கொள்வது திருடுவதற்கு சமன். திருடுவது பாவம். அந்தப் பாவத்திற்காக இயேசு மரிக்க வேண்டியிருந்தது. இதை நாம் மறவாமல் இருப்போமானால், நாம் கடனாக வாங்கிய பொருளை திரும்பக் கொடுத்துவிடுவோம். இப்படி நாமும் வாழ இயேசு சுவாமி தாமே நமக்கு உதவி செய்யும்படியாக இப்போதே ஜெபியுங்கள்!

ஜெபம்: **"அன்பின் ஆண்டவரே, நான் திருடாமலும், பொய் சொல்லாமலும் வாழ்ந்து, மற்றவர்களிடமிருந்து கடனாக வாங்கிய பொருட்களை திருப்பிச் செலுத்த எனக்கு உதவிசெய்தருளும் - ஆமென்."**

❑

# சிறுவர் சோலை



அன்பு சிறார்களே, மேலேயுள்ள படத்தை அழகிய வர்ணத்தால் நிறந்தீட்டி மகிழ்வதோடு நின்றுவிடாமல், “உதவி செய்” என்ற தலைப்பில் உங்கள் கவிதை, கதை, துணுக்குகளை 2012 நவம்பர் 10 ம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:

**சிறுவர் சோலை, *P.O.Box 1012, Colombo.***

ஏதேன் விபரங்களைப் பெற:

இங்கு வெளிவரும் விளம்பரங்களில், "பொருத்த மானது என நீங்கள் நினைக்கும் விளம்பரத்திற்கான தகவல்கள் தேவைப்படின், "உங்கள் பெயர் முகவரி, தொலைபேசி போன்ற விபரங்களை விளம்பர இலக்கத்துடன்" தெளிவாக குறிப்பிட்டு அதற்கான முத்திரை உடன் எமக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

உங்கள் விபரங்களை, விளம்பரம் கொடுத்தவருக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் விரும்பினால் மட்டுமே தொடர்புகொள்வர்.

இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப் பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத் தன்மைக் குறித்தோ சத்தியவசனம் உறுதிப்படுத்தவோ பொறுப்பேற்கவோ மாட்டாது.

ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:

"ஏதேன்" த.பெ.1012, கொழும்பு, இலங்கை.

ஏதேன் சஞ்சிகையில் பிரசுரிக்க:

உங்கள் விபரங்கள் இப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டுமானால், அதற்கான விண்ணப்பப் படிவங்களை எமக்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.

உரிய விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி, 2012 நவம்பர் 15ம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். தாமதமாயின் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

உங்கள் விபரங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்படா விடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் அதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படுகிறது.

இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின், அதனை சம்பந்தப்பட்டவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது.

ஏதேன் மணமகன் பகுதி

# மணமகன் விபரம்

(2012/E.M/3201) வயது 30, உயரம் 5'6". பொரகஸ் சபை, க.பொ.த(உ/த) கற்று, Field Officer ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (பொரகஸ்).

(2012/E.M/3202) வயது 33, உயரம் 5'6". அங்கிலிக்கன் சபை, BA English, Dip in Computer Applications கற்று, Marketing Manager ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். வெளிநாட்டிலுள்ள மணமகள் விரும்பத்தக்கது. (கொழும்பு 6).

(2012/E.M/3203) வயது 32, உயரம் ஆவிக்குரிய சபை, உயரம் 5'5". க.பொ.த(உ/த) கற்று, Water Board இல் கடமையாற்றும் மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றனர். (கம்பளை).

(2012/E.M/3204) வயது 36, உயரம் 5'. C.P.M சபை, Higher National Diploma Computer Technology கற்று, IT Officer ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (வவுனியா).

(2012/E.M/3205) வயது 31, உயரம் 5'9". R.C சபை, MBA பட்டதாரி, Operational Manager ஆக டுபாய் கம்பனியொன்றில் பணியாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 13).

(2012/E.M/3206) வயது 27 உயரம் 6'. மெதடிஸ்ட் சபை. Business Management கற்று, Finance Officer ஆக வெளிநாட்டில் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 10).

(2012/E.M/3207) வயது 27, உயரம் 5'3". A.O.G சபை, க.பொ.த(உ/த) கற்று முழுநேர போதகராக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

(2012/E.M/3208) வயது 47, உயரம் 5'3". எம்மாவுஸ் ஆலயம். க.பொ.த(உ/த) சிங்கள மொழியில் கற்று, நகைக்கடையில் தொழில்புரியும் மணமகனுக்கு, தேவ பயமுள்ள மணமகளைத் தேடுகின்றனர். (கொச்சிகடை).

(2012/E.M/3209) வயது 31, உயரம் 5'7". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று, பொலிஸ் உத்தியோகஸ்தராக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

(2012/E.M/3210) வயது 32, உயரம் 5'8". R.C சபை, க.பொ.த(சா/த) கற்று, Senior Chef ஆக டுபாயில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கண்டி).

(2012/E.M/3211) வயது 36, உயரம் 5'7". R.C சபை, க.பொ.த. (சா/த), Diploma in Catering Hotel Managment கற்று, Senior Chef ஆக கனடாவில் கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கண்டி).

(2012/E.M/3212) வயது 33, உயரம் 5'10". C.S.I சபை, B.A. பட்டதாரி. பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (யாழ்ப்பாணம்).

(2012/EM/3213) வயது 30, உயரம் 5'4". மெதடிஸ்த சபை, க.பொ.த( உ/த), Diploma in Teach கற்று, ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (டிக்கோயா).

(2012/EM/3214) வயது 42, உயரம் 5'9". A.O.G சபை, க.பொ.த(உ/த) Computer Software கற்று, Instructor ஆக தொழில் புரியும் மணமகனுக்கு, ஆங்கிலம் பேசும் 38 வயதிற்குட்பட்ட மணமகளைத் தேடுகின்றனர் (கொழும்பு 5).

(2012/EM/3215) வயது 28, உயரம் 5'6". New Life சபை, க.பொ.த. (உ/த) கற்று, முழுநேர திருச்சபை ஊழியத்தில் ஈடுபட்டுள்ள மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர் (கொழும்பு 13).

(2012/EM/3216) வயது 28, உயரம் 5'10". Colombo Gospel Tabernacle சபை, இலண்டனில் Higher National Diploma in Information Technology கற்று, Document Specialist ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். PR உள்ள வெளிநாட்டு மணமகள் விரும்பத்தக்கது. (மொரட்டுவை).

# மணமகள் விபரம்



(2012/E.F/2401) வயது 35, உயரம் 5'2". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) Diploma in Montessori கற்று, பாலர் பாடசாலை ஆசிரியராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

▶ ▶ ▶

(2012/E.F/2402) வயது 29, உயரம் 5'1". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(சா/த) Diploma in Montessori கற்று, பாலர் பாடசாலை ஆசிரியராக தொழில் செய்யும் மணமகளுக்கு, மண9மகனைத் தேடுகின்றனர். (இரத்தினபுரி).

▶ ▶ ▶

(2012/E.F/2403) வயது 24, A.O.G சபை, க.பொ.த(உ/த) கற்று, சபையில் பகுதி நேரமாக ஊழியம் செய்யும் கணனியில் அனுபவமுள்ள மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (தெகிவளை).

▶ ▶ ▶

(2012/E.F/2404) வயது 24, உயரம் 5'3". Christian Family Church, க.பொ.த(உ/த) கற்று, Executive ஆக பணிபுரியும் மணமகளுக்கு, வெளிநாட்டு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

▶ ▶ ▶

(2012/E.F/2405) வயது 28, உயரம் 5'10". A.O.G சபை, தமிழ்/சிங்களம் 8ம் வகுப்புவரை கற்று தையல் அனுபவமுள்ள இரட்சிக்கப்பட்ட நற்பண்புள்ள மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர் (வத்தளை).

▶ ▶ ▶

(2012/E.F/2406) வயது 27, உயரம் 4'11". A.O.G சபை, க.பொ.த(உ/த) கற்று, Dubai Rak வங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (நீர்கொழும்பு).

▶ ▶ ▶

(2012/E.F/2407) வயது 37, உயரம் 5'2". A.O.G சபை, க.பொ.த(சா/த) கற்று, தையல் ஆசிரியையாக, முழுநேர திருச்சபை ஊழியராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

▶ ▶ ▶

(2012/E.F/2408) வயது 40, உயரம் 5'4". கெத்சமனே சுவிசேஷ சபை, 10ம் வகுப்பு வரை கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).

▶ ▶ ▶

(2012/E.F/2409) வயது 31, கெத்சமனே சுவிசேஷ சபை, 10ம் வகுப்பு வரை கற்ற, மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).

▶ ▶ ▶

(2012/E.F/2410) வயது 34, உயரம் 5'5". C.P.M சபை, க.பொ.த(உ/த) கற்று, Customer care ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▶ ▶ ▶

(2012/E.F/2411) வயது 26, உயரம் 5'3". Christian Fellowship Center. Computer Software Engineering கற்று SLT Customer Care Officer ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (திருகோணமலை).

▶ ▶ ▶

(2012/E.F/2412) வயது 41, உயரம் 4'5". A.O.G சபை, 8ம் வகுப்புவரை கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொடுகொட).

▶ ▶ ▶

(2012/E.F/2413) வயது 28, உயரம் 5'2". A.O.G சபை, க.பொ.த(உ/த) கற்று, முகாமைத்துவ உதவியாளராக(இரத்தினபுரி மாநகர சபை) தொழில் புரிந்து சபை ஊழியத்தில் பகுதிநேரமாக ஈடுபட்டுள்ள மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (அவிசாவளை).

▶ ▶ ▶

(2012/E.F/2414) வயது 28, உயரம் 5'. A.O.G சபை, க.பொ.த (சா/த) கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (அரனாயக்க).

▶ ▶ ▶

(2012/E.F/2415) வயது 42, உயரம் 4'5". A.O.G சபை, க.பொ.த(சா/த) கற்று, சபை ஊழியம் செய்யும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கெவிலிபிட்டிய).

▶ ▶ ▶

(2012/E.F/2416) வயது 25, உயரம் 5'. A.O.G சபை, க.பொ.த(சா/த) கற்று, தற்போது இந்தியாவில் வேதாகம கல்லூரியில் கல்வி கற்கும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (களுத்துறை).

▶ ▶ ▶

(2012/E.F/2417) வயது 34, உயரம் 5'2". R.C சபை, க.பொ.த(உ/த) கற்று, Accounts Clerk ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கண்டி).

▶ ▶ ▶

(2012/E.F/2418) வயது 29, உயரம் 5'2". A.O.G சபை, க.பொ.த(உ/த) IT Engineer (Electronics & Communication) கற்று, IT Engineer ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (இந்தியா).

▶ ▶ ▶

(2012/E.F/2419) வயது 36, உயரம் 5'4". புதுவாழ்வு திருச்சபை, க.பொ.த (உ/த) கற்று ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (புத்தளம்).

▶ ▶ ▶

(2012/E.F/2420) வயது 28, உயரம் 5'3". A.O.G சபை, இரசாயனவியல் பட்டம்பெற்று M.Sc(Bio-technology) அவுஸ்ரேலியாவில் கற்றுள்ள மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட படித்த மணமகனைத் தேடுகின்றனர். (மொரட்டுவை).

▶ ▶ ▶

(2012/E.F/2421) வயது 32, உயரம் 5'7". மெதடிஸ்த சபை, க.பொ.த(உ/த), Civil Engineering கற்று, Civil Engineer ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 7).

▶ ▶ ▶

(2012/E.F/2422) வயது 34, உயரம் 5'2". A.O.G சபை, க.பொ.த(சா/த) முழுநேர ஊழியத்தில் போதகராக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கிரிபத்கொடை).

▶ ▶ ▶

(2012/E.F/2423) வயது 21, உயரம் 4'10". நாற்சதுர சுவிசேஷ சபை, க.பொ.த(உ/த), IDM கற்று Insurance Assistant ஆக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (நுகேகொடை).

▶ ▶ ▶

Registered in the Department of
Post of Sri Lanka under
No. QD/88/News/2012

COLOMBO 25.9.12

ශ්‍රී ලංකා இலங்கை SRI LANKA 024.00 PB1519

BACK TO THE BIBLE

ජීවිතාලෝකය சத்தியவசனம்

From :
Sathiyavasanam
P.O. Box 1012
Colombo.

FREE TSUB NO 237

MR.K.UMAHARAN *
MATTUVIL CENTRAL,
CHAVAKACHCHEF40000

# சத்தியவசன கலண்டர்... 2013




2013ம்
வருடத்திற்கான
வேத வசனங்கள்
அடங்கிய
சத்தியவசன
கலண்டர்

விலை ரூபா. 150.00
(தபால் செலவு தனி)

விரைவில்
பெற்றுக்கொள்ளலாம்...


**சத்தியவசனம் புத்தகசாலை**
120 A, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 7.
தொ.பே : (+94) 11-2687040, (+94) 11-2695441

**சத்தியவசனம் பணியகம் புத்தகசாலை**
டிம்மர் மண்டபம், இல 9,
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021-4925770